விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஆு மாசி மீ 19-ம் உ சனிக்கிழமை (03 - 03 - 1990) ஹிஜ்ரி 1410 ஷஃபா 05 ஓசை 13

## யாழ் பத்திரிகைகளின் தொலைபேசி விபரம் தேவையாம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்து பத்திரிகைகளின் தொலைபேசி இலக்கத்தை தெரிவிக்குமாறு மத்திய அரசாங்க கரும பீடங்களில் இருந்து அடிக்கடி தம்மை தொலைபேசி மூலம் தொல்லைக்குள்ளாக்குவதாக யாழ். செயலக அரசியல் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம் உட்பட அனைத்து பத்திரிகைகளின் தொலைபேசி இலக்கங்களையும் பெற்றுக்கொள்வதில் தமக்கு உயர் மட்டத்தில் இருப்பவர்கள் ஆவலாய் இருப்பதாகவும் இதுபற்றி விரைவில் அந்தந்தப் பத்திரிகைகளிடமிருந்து பெற்றுக் கொண்டு மேல்மட்டத்துக்கு தெரிவிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஈழநாதம் பத்திரிகைக்கு இன்னும் தொலைபேசித் தொடர்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.) (லோ)

## முறைசாராக் கல்வி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்விப்பிரிவில் சேருவோருக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் முறையே 7, 8, 9, 10, 11 திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளன.

மேற்படி பிரிவில் சேர்ந்து பயிற்சிபெற விண்ணப்பித்தவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சுமார் பத்தாயிரம் பேர் இக் கல்விப் பிரிவில் பயிற்சிபெற விண்ணப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தையல் பயிற்சி, தமிழ்-ஆங்கில தட்டெழுத்து போன்ற துறைகளில் பயிற்சி பெறவிரும்பியே பலர் விண்ணப்பித்திருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்குவரும் போது கீழ்வரும் ஆவணங்களுடன் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

1. பிறப்புச் சான்றிதழ் 2. கல்வித்தகைமைச் சான்றிதழ் 3. பாடசாலை விடுகைப் பத்திரம் 4. தொழிற் தகைமைச் சான்றிதழ் (இருப்பின்) 5. ஏற்கனவே முறைசாராக் கல்விப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகரில் 27 மாணவர் சித்தி

(சித்தங்கேணி)

அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் காரைநகரில் உள்ள பாடசாலைகளிலிருந்து 27 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

வாரிவளவு நல்லியக்கச் சபையினர் சித்தியெய்திய 27 மாணவர்களையும் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியுள்ளனர்.

யாழ். கல்வித் திணைக்கள சங்கீதக் கல்வியதிகாரி திரு எஸ். கணபதிப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

## காக்கை தீவு மீன் சந்தை பிரச்சினை தீர்க்கப்பட்டது

(சுதுமலை)

காக்கைதீவு மீன்பிடி இறங்குதுறைக்கு அண்மையில் அமைந்திருக்கும் சந்தையில் ... ருமாகிய க. சபாபதிப்பிள்ளை அவர்களின் தீவிர முயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்த

### வடக்குக் கிழக்கு மாகாணசபை

# முதலமைச்சர் பதவியிலிருந்து பெருமாள் விலகிவிட்டாரா?

## இல்லை என்கிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

### ஈழப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை என்கிறார் இந்திய அமைச்சு அதிகாரி

(கொழும்பு)

வடக்குக் - கிழக்கு மாகாண சபையை ஈழஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப் படுத்துவதற்கு ஒருவருடகால அவகாசம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. வரதராஜப் பெருமாள் தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாக ஒருசெய்தி கூறுகிறது. இதே சமயம் அவர் பதவி துறக்கவில்லையென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். உயர்பீடத்தினர் தெரிவித்தனர்.

### இம்ரான் நினைவு தினம்

மறைந்த யாழ். மாவட்ட விடுதலைப் புலிகளின் தளபதி லெப். கேணல் இம்ரான் (சங்கரப்பிள்ளை - சதானந்தன்) கொக்குவில் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா

### யாழ். வரும் யுனிசெவ் குழு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பப் பாடசாலைகள் சிலவற்றையும், முறைசாரக் கல்வி. பிரிவு இயங்கும் பாடசாலைகள் சிலவற்றையும் பார்வையிட யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகைதர இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஸ்கன்லன் தலைமையில் வருகைதர இருக்கும் இக்குழு, சிறுவர் கல்வியை விருத்தி செய்வது பற்றியும் ஆராய இக்

களிலிருந்து 27 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

வாரிவளவு நல்லியக்கச் சபையினர் சித்தியெய்திய 27 மாணவர்களையும் பாராட்டிப் பரிசில்கள் வழங்கியுள்ளனர்.

யாழ். கல்வித் திணைக்கள சங்கீதக் கல்வியதிகாரி திரு எஸ். கணபதிப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

...வித்தார்.

நேர்முகப் பரீட்சைக்குவரும் போது கீழ்வரும் ஆவணங்களுடன் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

1. பிறப்புச் சான்றிதழ் 2. கல்வித்தகைமைச் சான்றிதழ் 3. பாடசாலை விடுகைப் பத்திரம் 4. தொழிற் தகைமைச் சான்றிதழ் (இருப்பின்) 5. ஏற்கனவே முறைசாராக் கல்விப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# காக்கை தீவு மீன் சந்தை பிரச்சினை தீர்க்கப்பட்டது

(சுதுமலை)

காக்கைதீவு மீன்பிடி இறங்குதுறைக்கு அண்மையில் அமைந்திருக்கும் சந்தையில் மீன், இறால் போன்றவற்றை சந்தைப்படுத்தல் சம்பந்தமாக ஆனைக்கோட்டை, சாவல்காடு, மானிப்பாய், நாவாந்துறை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையே நீண்ட காலமாக இருந்துவந்த தகராறுகள் யாழ். உதவி அரசாங்க அதிபரும்வலி-தென்மேற்கு விஷேட ஆணையாளருமாகிய க. சபாபதிப்பிள்ளை அவர்களின் தீவிர முயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு கூட்டம் அண்மையில் கூடப்பட்டு சகலதரப்பினரும் அழைக்கப்பட்டு சில தீர்மானங்கள்எடுக்கப்பட்டன

இத்துறைமுகத்தைப் பாவிக்கும் மீன் பிடித் தொழிலாளர்களை இனங்கான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அந்தந்த கிராமசேவையாளர்

( 6ஆம் பக்கம் பார்க்க )

# மினிபஸ் மோதிய மாணவனை லாண்ட்மாஸ்ரர் அடித்து வீழ்த்தியது

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் நாச்சிமார் கோவிலடியில்வைத்து ஒரு பாடசாலை மாணவனை மோதியது. மினிபஸ் மோதியமையால் கீழே விழுந்த மாணவனை கே. கே. எஸ். வீதியால் சென்றுகொண்டிருந்த லாண்ட் மாஸ்ரர் மோதியது.

விபத்து நடந்த இடத்தில் பொது மக்கள் கீழே விழுந்த மாணவனைச் சுற்றி நின்ற போது லாண்ட்மாஸ்ரர் தலைமறைவானது. இச்சம்பவத்தில்

( 6ஆம் பக்கம் பார்க்க )

# மதிய போசன திட்டம் அதிபர்கள் நிலை சங்கடம்

(விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் மதிய உணவு வழங்குவதற்கானகொடுப்பனவுகள் உடனுக்குடன் திணைக்களத்தில் இருந்து கிடைக்காமையால் பாடசாலை அதிபர்கள் திணறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருட்கள் கொள்வனவு செய்யும் கடைகளுக்கு சில சமயங்களில் பெருந்தொகை நிலுவைவைக்க நேர்வதாகவும் அதன் காரணமாகப் பொருட்களின் விலைகளைக் குறைத்து பெற முடியாமல் இருப்பதாகவும் பாடசாலை அதிபர் ஒருவர் எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட அதிபரின் பாடசாலைக்கு மதிய போசனம்சம்பந்தமாக திணைக்களத்தால் ஐம்பதாயிரம் ரூபா வந்துசேர வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (21)

# தீவுப் பகுதி நூலகங்களுக்கு நூல் விநியோகம்

(தீவுப்பகுதி)

நீண்டகால இடைவேளைக்குப் பின்னர் வேலனைப் பிரதேசசபையின் கீழுள்ள நூலகங்களுக்கு புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை உள்ளூராட்சித் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது. இச் சஞ்சிகைகள் நயினாதீவு, புங்குடுதீவு, வேலனை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பிரதேசசபை உப அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (15)

# இல்லை என்கிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

# ஈழப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை என்கிறார் இந்திய அமைச்சு அதிகாரி

(கொழும்பு)

வடக்குக் - கிழக்கு மாகாண சபையை ஈழஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப் படுத்துவதற்கு ஒருவருடகால அவகாசம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. வரதராஜப் பெருமாள் தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாக ஒருசெய்தி கூறுகிறது. இதே சமயம் அவர் பதவி துறக்கவில்லையென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். உயர்பீடத்தினர் தெரிவித்தனர்.

இதே சமயம் எந்த ஒருபிரிவும் எந்த ஒரு குழுவும் ஈழம் பிரகடனம் செய்வதை இந்தியா ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது என்று இந்திய வெளிவிவகார சிரேஷ்ட அதிகாரியொருவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## ஒருவருட அவகாசம்

ஈழப்பிரகடனத் தீர்மானம், வடக்கு - கிழக்கு மாகாணசபை தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும் பத்தொன்பது அம்சக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக ஒருவருட அவகாசம் இலங்கை அரசுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். மேலிடம் தெரிவித்தது.

## ஆளுநர்குழு சந்திப்பு

ஈழக்குடியரசுப் பிரகடனத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்த வடக்கு-கிழக்கு மாகாணசபை நிறைவேற்றும் தீர்மானத்தை இலங்கை அரசு முதலில் உதாசீனப்படுத்தினாலும் பின்னர் எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் சர்ச்சையைக் கிளப்பத் தொடங்கவே வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்தினா, சிறில் ரணதுங்கா ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று நேற்றுக் காலை திருகோணமலைக்குச் சென்று முதலமைச்சர் வரதராஜப் பெருமாளை சந்தித்துப் பேசியது. இதன்பின் நேற்றிரவு இக்குழு ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்திப்பதாக இருந்தது.

## ஈழப் பிரகடனத் தீர்மானம்

வடக்குக்-கிழக்கு மாகாண சபையை சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசாக அமைப்பதற்கு அரசியல் அமைப்பைத் தயாரிப்பதற்கான அரசியல் நிர்ணய சபையாக வடக்கு-கிழக்கு மாகாண சபையின் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய உறுப்பினர்கள் தவிர்ந்த உறுப்பினர்கள் நிறைவேற்றிய பிரகடனத் தீர்மானம் ''வெறும் கேலிக்கூத்து'' என்று இலங்கை அரசியல் வட்டாரங்களிலும் இந்திய அரசியல் வட்டாரங்களிலும் கருத்து வெளியிடப்பட்டுள்ளன.

### இந்தியா ஆதரிக்காது

இலங்கையில் எந்தவொரு தமிழ்ப் பிரிவும் எந்தவொரு வடிவத்திலும் தனிநாட்டுக் கோரிக்கையை விடுத்தாலும் அதை ஆதரிக்க முடியாது. இதை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் வடக்குக்-கிழக்கு மாகாண சபையை சுதந்திர தன்னாதிக்க இறைமையுடைய ஈழ ஜனநாயக குடியரசாகப் பிரகடனப்படுத்துவதற்கு ஒரு வருடகால அவகாசம் கொடுத்து மாகாண சபையை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது இலங்கை அரசை எதிர்காலத்தில் உஷார் படுத்தி தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும் திட்டமிட்ட ஒரு அரசியல் சதி நடவடிக்கையேயென்றும் அரசியல் வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. வரதராஜப் பெருமாளை முதலமைச்சராகக்கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணசபை மேற்கொண்ட இந்த நடவடிக்கை இந்திய 'றோ' உளவு ஸ்தாபனத்தின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தவறு

கடந்தவாரம் மட்டக்களப்பில் அமைச்சர் ஹமீத்திற்கும், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக்கும் மத்தியில் நிகழ்ந்த பேச்சுக்கள் சம்பந்தமாக சில பத்திரிகையில் வந்த செய்திகள் தவறானவை என்று மட்டுமே விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான திரு. யோகரத்தினம் யோகி குறிப்பிட்டார். இதைத்தவிர உதயன் பத்திரிகை சம்பந்தமாக அவர் தெரிவித்ததாக ஈழநாதத்தில் வந்த கருத்துக்கள் அனைத்தும் தவறானதாகும்.

-ஆசிரியர்

## இம்ரான் நினைவு தினம்

மறைந்த யாழ். மாவட்ட விடுதலைப் புலிகளின் தளபதி லெப். கேணல் இம்ரான் (சங்கரப்பிள்ளை - சதானந்தன்) கொக்குவில் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இரவு ஏழு மணியளவில் நடைபெற இருக்கிறது.

## யாழ். வரும் யுனிசெவ் குழு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பப் பாடசாலைகள் சிலவற்றையும், முறைசாரக் கல்வி. பிரிவு இயங்கும் பாடசாலைகள் சிலவற்றையும் பார்வையிட யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகைதர இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஸ்கனலன் தலைமையில் வருகைதர இருக்கும் இக்குழு, சிறுவர் கல்வியை விருத்தி செய்வது பற்றியும்ஆராய இக்குழு தீரமானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## "ஈழப் பிரகடனத்தை இந்தியா ஆதரிக்காது"

### நட்புறவு ஒப்பந்தமும் அவசரமில்லையாம்

(புதுடில்லி)

''இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையுமே இந்தியா ஆதரிக்கிறது. ஈழம் கோரிக்கைக்கு இந்தியா ஒருபோதும் ஆதரவு கொடுக்கமாட்டாது'' என்று வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இலங்கை - இந்திய நட்புறவு ஒபபந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இந்திய அரசு வற்புறுத்துவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருந்தது பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி குறிப்பிடுகையில் ''இலங்கை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு எத்தனை காலம்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## இன்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விசார

( 6ஆம் பக்கம் பார்க்க )

# பொதுமக்கள் வாழும் வீடு அவர்களுக்கு தேவை

### ஜனாதிபதிக்கு கடிதம்

(சரவெட்டி)

வல்வெட்டித் துறையிலுள்ள பொதுமக்கள் வீடுகளில் தங்கி வாழும் இலங்கைப் படை[illegible] களை பொது மக்கள் நகரிகள் [illegible] கருதி வெளியேற்றுமாறு வ[illegible] வைப் பிரஜைகள் குழு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிற்கு கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

வல்வை இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள 107 பொது மக்கள் குடியிருப்புக்களை இலங்கை இராணுவம் தமது வசமாக்கியுள்ளனர். இதனால் இக்குடியிருப்புக்களுக்கு சொந்தமானவர்கள் நீ[illegible]தர மற்ற இடங்களில் [illegible] வாழுகின்றார்கள். இதனால் இம்மக்களுக்கு புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வீடுகளைப் புனரமைப்பதற்கான

( 6ஆம் பக்கம் பார்க்க )

## மாகாணசபை சட்டத்தில் தெளிவு இல்லை

### - பிரட்மன் கூறுகிறார்

முதல் அமைச்சரின் சிபார்சு இல்லாமல் மாகாண சபையைக் கலைப்பது என்பதில் கூடத் தெளிவு இல்லை எனினும் மாகாணசபை நிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பேற்க முடியும்.

ஜனாதிபதியின் சுவதேச விவகார ஆலோசகரான திரு. பிரட்மன் வீரக்கோன் இதனை பத்திரிகையாளர்களி

( 6ஆம் பக்கம் பார்க்க )

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

றோனியோ

தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள நம்பிக்கை நிறுவனம் ''கிளீன் கட்''

கருவாட்டுக்கு உகந்த அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M.
No. 777, K.K.S. ROAD,
JAFFNA.

யாழ்நகரில்
இன்றைய சினிமா

70 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
'சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, அமலா நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா
பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

# பாரதீய ஜனதாவின் வெற்றி

## தேசிய அரசிற்கு நெருக்கடியைக் கொடுக்கும்

இந்தியாவில் ஓர் குட்டிப் பொதுத் தேர்தல் ஒன்று நடந்து அதற்கான முடிவுகள் வெவிவந்துகொண்டிருக்கின்றன. தேர்தல் முடிவுகள் திட்ட வட்டமாக வெளிவராத வேளையிலும் இத் தேர்தல் இந்தியாவின் அரசியல் வரலாற்றில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதும், ஏற்படுத்தப் போகின்றது என்பதிலும் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

தற்பொழுது இந்தியாவில் சட்டசபைக்கான தேர்தல் நடந்த பகுதியில் பெரும்பாலும் வட இந்திய மானிலங்களாகும். அதிலும் குறிப்பாக பெரும்பாலும் ஹிந்தி பேசும் மானிலங்கள் ஆகும். பீகார்,ஒரிஸா, ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், மகா ராஷ்டிரம், இமாலயப் பிரதேசம், அருணாசலப் பிரதேசம் என்பனவற்றோடு யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரியிலும் தேர்தல் நடைபெற்றுள்ளது. இதில் பீகார், ஒரிஸா, இராஜஸ்தான் மத்திய பிரதேசம் என்பன ஹிந்தி பேசும் மானிலங்களாகும். கடந்த காலத்தில் இவ் மானிலங்களே (உத்திரப்பிரதேசம்) உட்பட) இந்திய ஆட்சியாளரைத் தீர்மானித்து வந்துள்ளமை முதலில் குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் நடந்த லோக்சபாத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோல்வியடையும் என எதிர்பார்த்ததாலும் பாரதீய ஜனதாக் சட்சி இவ்வளவு பெருமளவிலான ஆசனங்களைக் கைப்பற்றும் என ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. எந்த ஒரு அரசியல் விமர்சகர் எவரும் இதனைக் குறிப்பிடவும் இல்லை. அதே போன்று இல்லாவிடினும் சட்டசபைத் தேர்தலிலும் பாரதீக ஜனதாக்கட்சி எதிர்பார்த்ததைவிட உயர்ந்தளவு வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த சட்டசபையில் பாரதீக ஜனதாக் கட்சி இமாலயப் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் தனிப் பெரும் கட்சியாக ஆட்சியமைக்கும் என அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர், ஆனால் தேர்தல் முடிவுகள் அதற்கும் மேலாக குஜராத், பீஹார், மாநிலங்களிலும் பாரதீய ஜனதாக் கட்சியின் உறுதுணையில்லாமல் ஜனதா தளம் ஆட்சி அமைக்க முடியாத ஓர் நிலையைஏற்படுத்தியிருந்தது.

பாரதீய ஜனதாக் கட்சியின் இவ்வெற்றி தனியாக இந்திரா காங்கிரசிற்குமட்டும் நெருக்கடியை ஏற்படுத்தவில்லை. ஜனதா தளத்தையும் குறிப்பிடக்கூடிய விதத்தில் பாதித்துள்ளது. பாரதீய ஜனதாவின் நிலை உறுதிப்பட்டதால் சிறுபான்மை அரசான தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு, அவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதே வேளை மார்க்சிஸ்ட் கம்யூனிஷ்ட் கட்சியின் செல்வாக்கைவிட சிறுபான்மை அரசிற்கு பாரதீய ஜனதாக் கட்சியின் உதவி திட்டவட்டமாகத் தேவைப்படும்.

வலதுசாரி இந்து அடிப்படைக் கோட்பாட்டுக் கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு முக்கியமான காரணங்கள் இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களான பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களின் ஏற்பட்டுள்ள அரசியற் கொந்தளிப்பே காரணமாகும். பாரதீய ஜனதாக் சட்சி தாங்கள் இந்துசமயக் கோட்பாட்...ளின் வெற்றியின் அடிப்படை தெரியவரும். வடமேற்கு இந்தியாவில் சஷ்மீர் பஞ்சாப் மாநிலங்களைச் சூழவுள்ள மாநிலங்களும் பாக்கிஸ்தான் எல்லையை அண்டியுள்ள மாநிலங்களிலுமே அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அதாவது இந்துக்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள இடங்களிலும் இந்தியாவிற்கு (அவர்களின் கருத்தின்படி இந்துக்கள்) நெருக்கடி ஏற்படும் என்ற இடங்களிலும் இவ் வெற்றிகள் பெரிய அளவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜெயா

பாரதீய ஜனதாக் கட்சியில் வெற்றி பெற்ற இம்மாநிலங்களை அண்டய மாநிலங்களில் இந்துக்களுக்குஎதிரான நடவடிக்கைகளே காரணமாக உள்ளது. பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் தீவிரவாதிகளின் தாக்குதலினால் பெரிய அளவில் இந்துக்கள் பாதிக்கப் பட்டிருப்பதோடு அகதிகளாகவும் உள்ளனர். இதனால் இந்துக்கள் தங்களுக்கு பாதுகாப்பு வாங்கக்கூடிய கட்சியாக பாரதீய ஜனதாக்கட்சியையும் அவர்களின் கூட்டாளிகளான சிவசேனையையுமே நம்புகின்றனர். அடுத்ததாக பாரதீய ஜனதாக் கட்சியினர் வெற்றி பெற்ற அனேக பகுதிகள் பெரும்பாலும் 90 வீதத்துக்கு மேல் இந்துக்களின் பிரதேசங்களுமாகும். பாரதீய ஜனதாக்கட்சிஅமோகவெற்றி பெற்ற இமாலயப் பிரதேசம் 95·4 வீதமும் காலிஸ்தான் 89·3 வீதமும் இந்துக்களைக் கொண்ட பிரதேசமுமாகும். பாரதீய ஜனதாக் கட்சியின் அலைவடமேற்குஇந்தியாவில் வீசியது போன்று கிழக்கு இந்தியாவிலோ தென்இந்தியாவிலோ வீசாததற்கு அவர்களின் தீவிரவாதப் போக்கே காரணமாகும்.

தேசிய முன்னணி அரசாங்கத்தின் சிலநடவடிக்கைகளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கான வெற்றிவாய்ப்பைக் கொடுத்துள்ளன. தேசிய முன்னணி அரசாங்கம் உள்துறை அமைச்சராக முஸ்லீமை நியமித்தது இந்துக்களைப்பொறுக்களவில் ஓர்விருப்பப்படாத செயலாக...

பலசரக்கு சாமான்களும்,
பல்ப், கோடியல் வகைகளும்,
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ அம்பாள்
ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி. (B 142)

1. போட்டோ பிரதிகள் மிகத் தரமாக செய்து கொடுக்கப்படும்.
2. வீடியோ கொப்பிகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

(தமிழ் ஆங்கிலப் படங்கள்)
நாடுங்கள்

A.M.R. வீடியோ சென்ரர்
பலாலி வீதி,

எமது நல்வாழ்த்துக்கள் "ஈழநாதம்"

சிவசக்தி ரெக்ஸ்
அன்
புத்தகசாலை

❋ புடவை
❋ பாடசாலை உபகரணங்கள்
மற்றும் ஏனைய சாமான்கள் விற்பனையாளர்

கண்டி வீதி,
யாழ்ப்பாணம். B 138

பலசரக்கு வியாபாரம்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

கணபதி ரேட் சென்ரர்
கண்டி வீதி,
கைதடி.
(B - 139)



ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

## பட்டப்பகலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வீடொன்றிற்குள் நுழைந்து 'கசெற் செற்' திருடிய திருடனை அப்பகுதி பொதுமக்கள் பிடித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன் தினம் வேலுப்பிள்ளை அரசரட்ணம் என்பவரது வீட்டினுள் நுழைந்த இத்திருடன் 'கசெற் செற்'ஐ திருடிக் கொண்டு வெளியே வரும் போது அகப்பட்டுக் கொண்டார் என்று அறியப்பட்டது. (தி)

பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
திருநெல்வேலி. (B 142)

1. போட்டோ பிரதிகள் மிகத் தரமாக செய்து கொடுக்கப்படும்.
2. வீடியோ கொப்பிகள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

(தமிழ் ஆங்கிலப் படங்கள்)

நாடுங்கள்

**A. M. R.** வீடியோ சென்ரர்
பலாலி வீதி,
திருநெல்வேலி.
B/140

## இலவச மாதிரிவினாத்தாளும்கருத்தரங்கும்
## O/L MARCH 90

O/L, A/L பரீட்சைகளுக்கு முன்னதாக வருடா வருடம் எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் கல்விக் கருத்தரங்கு, மாதிரி வினாத்தாள் விளக்கங்கள் இம்முறையும் வழமை போலவே நடைபெறவுள்ளது. இலவசமாக நடாத்தப்படும் இக் கருத்தரங்கில் எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களும் பங்குபற்றலாம்.

சகல பாடங்களுக்கும் பகுதி 1 ற்கான பரீட்சையும், பகுதி I, II ற்கான வினாத்தாள் விளக்கங்களும் 12. 03. 1990 இலிருந்து நடைபெறும்

நேரம்:- 3. 00 - 5. 30 P. M

★ பரீட்சைக்கான புள்ளிகள் கருத்தரங்கிற்கு முன் அறிவிக்கப்படும்.
★ 05. 03. 1990 ற்கு முன் எமது நிறுவன அலுவலகத்தில் பதிவு செய்து இதற்கான அனுமதி அட்டையைப் பெற்று இடநெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**BOND INSTITUTES**
**58 A, STANLEY ROAD, JAFFNA.** B - 114

வின் நிலை உறுதிப்பட்டதால் சிறுபான்மை அரசான தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு, அவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதே வேளை மார்க்சிஸ்ட் கம்யூனிஷ்ட் கட்சியின் செல்வாக்கைவிட சிறுபான்மை அரசிற்கு பாரதீய ஜனதாக் கட்சியின் உதவி திட்டவட்டமாகத் தேவைப்படும்.

வலதுசாரி இந்து அடிப்படைக் கோட்பாட்டுக் கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு முக்கியமான காரணங்கள் இந்தியாவின் வடமேற்கு மாநிலங்களான பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களின் ஏற்பட்டுள்ள அரசியற் கொந்தளிப்பே காரணமாகும். பாரதீய ஜனதாக் கட்சி தாங்கள் இந்துசமயக் கோட்பாட்டாளர் இல்லை என மறுத்து வந்துள்ள போதிலும், அவர்களின் கூட்டாளிகள் சிவசேனையினர் என்பதில் இருந்து அவர்களின் உண்மைத் தன்மை தெரியவரும்.

அத்கோடு பாரதீய ஜனதாக்கட்சியினர் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற பகுதிகளைத் நோக்கின் அவர்கள் பெரும்பாலும் 90 வீதத்துக்கு மேல் இந்துக்களின் பிரதேசங்களுமாகும். பாரதீய ஜனதாக்கட்சிஅமோகவெற்றி பெற்ற இமாலயப் பிரதேசம் 95·4 வீதமும் காலிஸ்தான் 89·3 வீதமும் இந்துக்களைக் கொண்ட பிரதேசமுமாகும். பாரதீய ஜனதாக் கட்சியின் அலைவடமேற்கு இந்தியாவில் வீசியது போன்று கிழக்கு இந்தியாவிலோ தென்இந்தியாவிலோ வீசாததற்கு அவர்களின் தீவிரவாதப் போக்கே காரணமாகும்.

தேசிய முன்னணி அரசாங்கத்தின் சிலநடவடிக்கைகளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கான வெற்றிவாய்ப்பைக் கொடுத்துள்ளன. தேசிய முன்னணி அரசாங்கம் உள்துறை அமைச்சராக முஸ்லீமை நியமித்தது இந்துக்களைப்பொறுக்களவில் ஒர்விரும்பப்படாத செயலாக இருந்தது. இந்தியாவில் முதன்மையான அமைச்சுக்களில் உள்துறை அமைச்சும் ஒன்றாகும். அடுத்ததாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான அரசாங்கம் வழங்கி வந்த சலுகைகளை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது அடுத்த அம்சமாகும். இத் தாழ்த்தப்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
தமிழீழ மக்களின்
இதயநாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்

கட்டிடப் பொருட்கள், தீந்தைவகைகள்
விவசாய உபகரணங்கள், கிருமிநாசினிவகைகள்
மின்சார உபகரணங்கள், Slon P. V. C
பைப் வகைகள் அனைத்திற்கும் ...

**ஸ்ரீ அபிராமி**
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.
(B - 42)

**கணபதி ரேட் சென்ரா**
கண்டி வீதி,
கைதடி.
(B - 139)

கலர் பிலிம்
PROCESSING & PRINTING
செய்ய சிறந்த ஸ்தாபனம்
மாதாந்தம் 5 அதிஷ்டசாலிகட்கு
கலர் பிலிம் சுருள் இறும்!
**கொழும்பு ஸ்ரூடியோ**
யாழ்ப்பாணம்

**குறிஞ்சி பார்மசி**
இல. 3, நவீன சந்தை,
திருநெல்வேலி.

சகல விதமான, தரமான
ஆங்கில மருந்து வகைகள்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்
(B - 141)

நாதமே உன் செய்திகளை ஈழம் எங்கும் பரப்புவாயாக!

**Yarl Metal Industries**

250, 254 K. K. S. ROAD,
JAFFNA.
Phone: 7049

(B - 134)

# காங்கிரஸ் கட்சியின் தலைமை மாறுமா?

## சட்டசபைத் தேர்தல் தோல்வியின் எதிரொலி

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைப் பற்றி ஆராய்வதற்காக இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழு இன்று கூடுகின்றது. கட்சியின் பொதுச் செயலாளர்களான வி. என். ஆர். சிங், வி. என். பட்டீல் ஆகியோர் தெரிவித்தனர்.

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் மகாராஷ்டிரா மாநிலம் தவிர ஏனைய ஏழு மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. லோக்சபாவிற்கு நடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைவிட இத்தோல்வி இந்திரா காங்கிரசிற்குப் பெரும் இடியாக உள்ளது.

இச்செயற்குழுக் கூட்டத்திற்கு கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியே தலைவராக இருப்பார். இக்கூட்டத்தில் கட்சியின் தோல்விக்கான காரணங்கள் ஆராயப்படவுள்ளதாக செயலாளர் தெரிவித்தார்.

அதேவேளை இக்கட்சிக் கூட்டத்தில் ராஜீவ் காந்தியின் தலைமைக்கு எதிராக கருத்துக்கள் முன்வைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. லோக்சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்ததற்கு ராஜீவின் தலைமைக்கு எதிரான கருத்துக்கள் வட மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடம் இருந்து வந்தது. சில கட்சித் தலைவர்கள் கட்சியைவிட்டு வெளியேறியும் உள்ளனர். தற்பொழுது மீண்டும் ஏற்பட்டுள்ள இத் தோல்வி மேலும் ராஜீவின் தலைமைத்துவத்தை கேள்விக்குரியதாக்கியுள்ளது.

ஆனால் இதுபற்றிக் கட்சிச் செயலாளர்களிடம் கேட்ட போது இந்தத் தகவல் முற்றிலும் தவறானது. எங்களுக்கு எதிரானவர்கள் இத்தகைய ஒன்றைக் கிளப்பிவிட்டிருக்கின்றார்கள். இந்திரா காங்கிரஸ் தலைமையில் எந்தவித மாற்றமும் இருக்காது. எங்களுக்கு ராஜீவ் தலைமையில் முழு நம்பிக்கை இருக்கின்றது என்று தெரிவித்தார்கள். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இம்முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டதுதான் என்றும் தெரிவித்தார்.



## புகையிரதத்தில் குண்டு வெடிப்பு
## 5பேர் பலி 500 பேர் காயம்

(டில்லி)

டில்லிக்கு அருகில் புகையிரதத்தில் குண்டு வெடித்ததில் 5 பேர் கொல்லப்பட்டனர் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர், பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரஸ் நிலையத்தில் இருந்து மத்திய பிரதேசிலுள்ள பிதாப்பூர் நகரை நோக்கிசென்று கொண்டிருந்த எக்ஸ் பிரஸ் ரயில் வண்டியில் இக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. மீரத் புகையிரத நிலையத்தில் புகையிரதம் நின்ற போது இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

## கல்கத்தாவில் மீண்டும் கல் மனிதன் பீதி

(கல்கத்தா)

கல்கத்தா நகரில் மனிதர்களின் தலையில் கல்லைப் போட்டு கொலை செய்யும் கொலை வெறியனின் நடமாட்டம் உள்ளது.

கடந்த சில மாதங்களாக அவன் 11 பேரை கொலைசெய்தான் இப்போது 15 வயது சிறுவன் ஒருவன் அதேபோல கொலை செய்யப்பட்டுள்ளான். தலை நசுக்கிய நிலையில் அந்தச் சிறுவனின் சடலம் கல்கத்தாவின் மத்திய பகுதியில் உள்ளசிருண்டா மேம்பாலத்திற்கு அடியில் உள்ள சுரங்கப் பாதையில் கிடந்தது. அருகில் 12 கிலோ எடையுள்ள பெரிய கல் ஒன்று இரத்தம் தோய்ந்த நிலையில் கிடந்தது. இந்த கொலையை அடுத்து மீண்டும் கல்கத்தா நகரம் முழுவதும் கல் மனிதன் பற்றிய செய்தி பரவியுள்ளது.

## காஷ்மீரில் தொடரும் வன்முறை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஸ்ரீ நகர் பகுதியில் வியாழக்கிழமை பொலிசார் சுட்டதில் 20 பேர் இறந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீ நகரில் நகரை நோக்கி வந்த பெரியதொரு காயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதுபற்றி இந்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வந்தவர்கள் பொலீசார்மீது கற்களை வீசியதாக

## தென் கொரியாவில் அரசியல் கைதிகள் விடுதலை

(சியோன்)

தென் கொரியா சென்ற வாரம் 1,111 கைதிகளை விடுதலை செய்துள்ளது. விடுதலை செய்யப்பட்டவர்களில் 22 பேர் இடதுசாரிகள் என்றும், இவர்கள் வடகொரியாவக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டவர்கள் என்றும் நிதி அமைச்சர் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

(1919-ல் யப்பானில் குடியேற்ற ஆட்சிக்கெதிராக நிகழ்ந்த கிளர்ச்சியை நினைவு கூரும் முகமாகவே இவர்கள் நன்நடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களாம். 1910 முதல் 1945 வரை யப்பானிய குடியேற்ற ஆட்சி முறை கொரியாவில் நிலவியது என்பது குறிப்பிடத் தக்கது.

கம்யூனிஸ்ட் சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக இன்னும் 150 பேர் தென் கொரியாவில் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

## காடுகள் அழிவதால் மழை குறைகின்றது.

(வவுனியா)

கடந்த ஐந்து நாட்களுக்குள் வவுனியா பிரதேசத்துக்குள் அதிகளவான மழை பெய்துள்ளது. வவுனியாப் பிரதேசத்துள் அடங்கியிருக்கும் தாண்டிக்குளம், நொச்சிமோட்டை ஆகிய பகுதிகளில்

## மன்னாரில் விவசாயிகளுக்கு உதவித் திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாய இலாகா, சமநல சேவை நிலையங்கள் போன்றவற்றுடன் இணைந்து, மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் கடந்த 89/90 ஆம் ஆண்டில், 1000 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல், உப உணவு விதைகள் போன்றவற்றை வழங்கியது. இருந்தும் கடந்த வருடம் கிடைத்த குறைந்த மழை வீழ்ச்சியினாலும், குறுகிய மாத விதை நெல் தட்டுப்பாட்டினாலும், இம் மாவட்டத்தில் 40% நெற்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. தை மாதம் முதற் கிழமைகளில் எதிர்பாராமல் கிடைத்த 235 மி. மீ. க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியினால், சில குளங்களில் போதியளவு நீர் காணப்பட்டது. இதைப் பயன்படுத்தி துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் 1990 ஆம் ஆண்டில் இடைப்போகம் செய்வதற்கு விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கியது.

## கொர்பசேவுக்கு நிறைவேற்று அதிகாரம்

(மஸ்கோ)

சோவியத் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் கொபர்சேவின் தீர்மானம் ஒன்றை சுப்றீம்சோவியத் (பாராளுமன்றம்)பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது. ஜனாதிபதிக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் தீர்மானம் ஒன்று சோவியத் ரஷ்யப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது இதுதான் முதல்தடவையாகும்.

மேற்படி தீர்மானத்துக்குச் சாதமாக 347 பேரும் எதிராக 24 பேரும் வாக்களித்தனர். 43 பேர் வாக்களிப்பில் கலந்து

புதிய ஜனாதிபதியைத் தெரிவதற்காக சுப்பிறீம் சோவியத் கூட்டம் மார்ச் 12-13ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

அவதானிகள், கொபர்ச்சேவே புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என அபிப்பிராயப்படுகின்றனர். முப்படைகளுக்கும் தலைவனாகவும், ஒரு நாட்டுடன் யுத்தப் பிரகடனம் செய்யக்கூடியவராகவும் அவசர காலக்சட்டம், இராணுவ ஆட்சி ஆகியவற்றைப் பிரகடனம் செய்யும் அதிகாரங்களுடன் எந்த சோவியத் குடியரசையும் ஜனாதிபதியின் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரக்கூடிய அதிகாரங்கள் புதிய திட்டத்தின்கீழ் ஜனாதிபதிககு வழங்கப்பட்டுளளன.

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை (4-3-90) பி. ப 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்திற்கு கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக கச்சேரிக் கணக்காளர். திரு. எஸ். இராசநாயகம் கலந்து கொள்வார். (18

## ஏன் இந்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

களின் தலையில் கல்லைப் போட்டு கொலை செய்யும் கொலை வெறியனின் நடமாட்டம் உள்ளது.

கடந்த சில மாதங்களாக அவன் 11 பேரை கொலைசெய்தான் இப்போது 15 வயது சிறுவன் ஒருவன் அதேபோல கொலை செய்யப்பட்டுள்ளான். தலை நசுக்கிய நிலையில் அந்தச் சிறுவனின் சட[illegible] உள்ள சுரங்கப் பாதையில் கிடந்தது. அருகில் 12 கிலோ எடையுள்ள பெரிய கல் ஒன்று இரத்தம் தோய்ந்த நிலையில் கிடந்தது. இந்த கொலையை அடுத்து மீண்டும் கல்கத்தா நகரம் முழுவதும் கல் மனிதன் பற்றிய செய்தி பரவியுள்ளது.

[illegible] ஒன்று தெரிவிக்கிறது.

(1919-ல் யப்பானில் குடியேற்ற ஆட்சிக்கெதிராக நிகழ்ந்த கிளர்ச்சியை நினைவு கூரும் முகமாகவே இவர்கள் நன்நடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களாம். 1910 முதல் 1945 வரை யப்பானிய குடியேற்ற ஆட்சி முறை கொரியாவில் நிலவியது என்பது குறிப்பிடத் தக்கது.

# காஷ்மீரில் தொடரும் வன்முறை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஸ்ரீ நகர் பகுதியில் வியாழக்கிழமை பொலிசார் சுட்டதில் 20 பேர் இறந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீ நகரில் நகரை நோக்கி வந்த பெரியதொரு ஆர்ப்பாட்டத்தை நோக்கி பொலிசார் சுட்டதில் 13பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயம் அடைந்ததாகவும் விமான நிலையம் அருகில் பொலிசார் சுட்டதில் 8 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதுபற்றி இந்திய அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வந்தவர்கள் பொலீசார்மீது கற்களை வீசியதாகவும் அதில் பொலிசார் சுட்டதில் 2 பேர் இறந்ததாகவும் 9 பேர் படுகாயம் அடைந்ததாகவும் காயமடைந்தவர்களில் 5 பேர் ஆஸ்பத்திரியில் இறந்ததாகவும் தெரிவித்தனர். மற்றொரு சம்பவத்தில் பாடசாலை பஸ் பயணிகள் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை வன்முறைக் கும்பலொன்று தாக்கியதாகவும் இதனைக் கலைப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் சுட்டதில் 8 பேர் இறந்ததாகவும் 5 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இக் சூட்டுச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் அரசாங்கம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

## தென் ஜேர்மனியிலும் பலகட்சி ஆட்சி முறை

(ஏடன்)

தெற்குஜேர்மன் நாடும் பலகட்சிஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்டு வர விரும்புவதாக அந்நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளார். இப்பொழுது அங்கு மார்க்ஸிய சோஷலிச ஆட்சிமுறையே இருந்து வருகிறது.

## காடுகள் அழிவதால் மழை குறைகின்றது.

(வவுனியா)

கடந்த ஐந்து நாட்களுக்குள் வவுனியா பிரதேசத்துக்குள் அதிகளவான மழை பெய்துள்ளது. வவுனியாப் பிரதேசத்துள் அடங்கியிருக்கும் தாண்டிக்குளம், நொச்சிமோட்டை ஆகிய பகுதிகளில் அதிகளவு மழை பெய்தது.

ஆனால் இப்பிரதேசத்தில் பெய்த மழை வவுனியாப் பட்டினம், இறம்பைக்குளம் ஆகிய இடங்களில் பெய்யவில்லை. இதனால் மக்கள் வியப்படைந்தனர்.

காடுகள் கண்டபடி அழிக்கப்படுவதால், காடுகள் அற்ற பிரதேசங்களில் மழை குறைவடைகின்றது. சமீப காலங்களில் மழையின் போக்குகள் இதையே காட்டுவதாக வன அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்குத் தொடரில் இரண்டாவது கருத்தரங்கு இன்று சனிக்கிழமை குருநகரில் உள்ள சென் றோக்ஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

'சமுதாய அமைப்பும் மகளிர் முன்னேற்றமும்' என்ற தலைப்பில் நடைபெறும் இக் கருத்தரங்கில் பல பெண்கள் கலந்து கொள்ள இருக்கின்றனர். (தி)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி தெற்கு ஐக்கிய நாணயசங்கத்தினரால் நடாத்தப்படும் விசேட பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாலைதீவு புனித அந்தோனியார் திருநாள் குறிப்பிட்ட காலப் பகுதியில் நடைபெற உள்ளதால், மேற்படி கூட்டத்தினை ஒத்திவைக்கும்படி உறுப்பினர்கள் கேட்டுள்ளதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

# வி. பி. சிங்கின் நபீபியப் பயணம்

(டில்லி)

இந்தியப் பிரதம மந்திரி வி பி. சிங் நபீபியா சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார். எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி நள்ளிரவில் நடைபெறும் இச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஆபிரிக்க முன்னணி நாடுகளின் பல தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. மேலும் இந்தியப் பிரதமமந்திரி வி. பி. சிங்கின் முதலாவது வெளிநாட்டுப் பிரயாணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மன் காலனியாக இருந்த நபீபியா 1 ஆம் உலக மகாயுத்தம் முடிவடைந்த போது தென் ஆபிரிக்கா ஆட்சியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் தென் ஆபிரிக்காவிடம் இருந்து சுதந்திரம் கோரி நீண்டகாலமாக சுவாப்போ கெரிலாக்களின் ஆயுதப் போராட்டம் நடத்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹோட்டலில் தீ 10 பேர் மாண்டனர்

(கெய்றோ)

எகிப்தின் தலை நகரான கெய்றேவிலுள்ள ஐந்துநட்சத்திர ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் பத்துப் பேர் உயிரிழந்தனர். சிதைந்து கருகிப் போன ஹோட்டல் கட்டிட உடைவுகளுக்குள் மேலும் பல உல்லாசப்பயணிகளின்சடலங்கள் கிடக்கக் கூடுமென்று பொலிஸசார் அஞ்சுகின்றனர். உல்லாசப் பயணிகள் உட்பட முப்பத்தொரு பேர் காயமடைந்தனர்.

# நிறைவேற்று அதிகாரம்

(மஸ்கோ)

சோவியத் ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் கொபர்சேவின் தீர்மானம் ஒன்றை சுப்றீம்சோவியத் (பாராளுமன்றம்)பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது. ஜனாதிபதிக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் தீர்மானம் ஒன்று சோவியத் ரஷ்யப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது இதுதான் முதல்தடவையாகும்.

மேற்படி தீர்மானத்துக்குச் சாதகமாக 347 பேரும் எதிராக 24 பேரும் வாக்களித்தனர். 43 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பால்குடியாசுகளான எஸ்தோனியா, லித்துானியா, லவற்றியா, ஜேர்ஜியா கோர்க்கேசியன் குடியாசு ஆகியவைகளின் பிரதிநிதிகள் தான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லையாம்.

இத் தீர்மானம் சர்வதிகாரத்துக்கான வழி என்றும் 'ஜனநாயகத்துக்கு ஓர் அடி, என்று தீர்மானத்தை எதிர்த்தும் பேசியவர்கள் கூறினார்கள். நீண்ட நேரம் இடம் பெற்ற காரசாரமான வாக்குவாதத்துக்குப் பிறகு தீர்மானம் நிறைவேறியது.

புதிய ஜனாதிபதியைத் தெரிவதற்காக சுப்பிறீம் சோவியத் கூட்டம் மார்ச் 12-13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

அவதானிகள், கொபர்ச்சேவே புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என அபிப்பிராயப்படுகின்றனர். முப்படைகளுக்கும் தலைவனாகவும், ஒரு நாட்டுடன் யுத்தப் பிரகடனம் செய்யக்கூடியவராகவும் அவசர காலச்சட்டம், இராணுவ ஆட்சி ஆகியவற்றைப் பிரகடனம் செய்யும் அதிகாரங்களுடன் எந்த சோவியத் குடியரசையும் ஜனாதிபதியின் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரக் கூடிய அதிகாரங்கள் புதிய திட்டத்தின்கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

## கிளிநொச்சியில் மக்கள் குரல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் மக்கள் குரல் தமிழ் ஓசை (வர்த்தக விளம்பர சேவை) கடந்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு பல வர்த்தகர்களின் ஆதரவில் சிறப்பாக இயங்கிவருகிறது.

இச்சேவையின் ஒலி அமைப்பு நகரின் நடுப்பகுதி வரை விஸ்தரிக்கப் பட உள்ளது.

மேற்படி சேவையில் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதி அழிந்து, சிதைந்து போன கலை, கலாசாரத்தை மீட்பதற்கு பயன்படுதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சேவையினால் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறியக்கூடிய வகையில் செய்திகள் ஒலிபரப்பப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (8)

கல்லூரியின் வருடாந்த இல்ல பெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை (4-3-90) பி.ப 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்திற்கு கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக கச்சேரிக் கணக்காளர். திரு. எஸ். இராசநாயகம் கலந்து கொள்வார். (18

# ஏன் இந்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசாங்கத்தின் ஆட்சியில் இருந்தபோது தேசிய வீடமைப்பு சபையாக இருந்து வீடமைப்புத்திணைக்களமாக தற்போது மாகாண அரசின் அதிகாரத்தின் கீழ் இயங்கும் இத்திணைக்களத்தில் தற்போதுவேலை பார்த்து வரும் ஊழியர்கள் மத்திய அரசின் தேசிய வீடமைப்பு சபையில் எட்டு மணி நேர வேலையும், போதுமான சம்பளமும் ஏனைய கஷ்டப் பிரதேச படிகளையும் பெற்று வந்தனர்.

ஆனால் மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் வீடமைப்புத் திணைக்களமாக மாற்றப்பட்ட பிறகு இத்தகைய சலுகைகள் எதுவும் தமக்கு வழங்கப்படவில்லை என்று குறை கூறுகின்றனர். அத்துடன் தமக்குக் கிடைக்க வேண்டிய மாதாந்தப் படிகளே தம்மை வந்தடையவில்லை என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை சில சிற்றூழியர்கள் பதவி இறக்கப்பட்டு இரவுக் காவல் வேலைக்கு இடப்பட்டுள்ளதுடன் பன்னிரெண்டு மணிநேர வேலைக்கும் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதும் ஊழியர் மட்டத்திலிருந்து தெரிய வருகிறது.

மேலும் வேலை நேர அதிகரிப்பைக் காரணமாகக் கொண்டும், கிடைக்கப் பெறாத ஊக்கத் தொகைகளைப் பெறுவதற்காகவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோது, அதிகாரிகள் கஷ்டப் பிரதேசங்களுக்கு தம்மை மாற்றி விடப்போவதாக மிரட்டியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் பற்றி அலுவலக மட்ட உத்தியோகஸ்தர்களிடம் விசாரித்தபோது நாட்டின் தென்பகுதியில் இதே திணைக்களப் பகுதிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளமும் மேலதிகப் படிகளும் வளங்கப்பட்டு வருவதாகவும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் இதே திணைக்களத்தில் பணிபுரியும் எமக்கு மட்டும் ஏன் இந்த நிலை! என விழிக்கின்றனர்.

கஷ்டப் பிரதேசங்களுக்கு செல்ல விருப்பமில்லாள தொடர்ந்து இந்த சம்பது மில்லாத அரசாங்க வேலை செய்வதாகவும் அவ் உத்தியோகத்தர்கள் கூறினர். (லோ

## மீண்டும் சென். ஜோன்ஸ் சென்றல் கிரிக்கெட் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

வடமாகாணத்திலேயே மிகப் பெரிய கிரிக்கெட் போட்டியாக நிகழும் சென்றல் - சென் ஜோன்ஸ்போட்டி இம்முறை மீண்டும் நடைபெறவிருக்கிறது.

கடந்த ஐந்து வருடங்களாக சில இடையூறுகள் காரணமாக நடைபெறாமல் இருந்து வந்த இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி இம்மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியை இம்முறை மிகவும் சிறந்த முறையில் நடத்துவதற்காக இரு கல்லூரிகளும் சேர்ந்து விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் தற்போதிருந்தே மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் சீர்குலைந்த நிலையிலிருந்த யாழ். மத்திய கல்லூரி மைதானத்தை புனரமைப்புச் செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்கது. (42)

## கணவனை இழந்தும் இப்படிப் பெண்கள் அவதி

(வவுனியா)

கடந்தகால வன்செயல்களினால் பல நூற்றுக்கணக்கான பெண்கள் தமது கணவன்மாரை இழந்துவிட்டனர் ஆனால் இவர்கள் காணாமல் போய்விட்டனர், அல்லது இராணுவத்தால் பிடிக்கப்பட்டு பின்பு ஆள் இல்லை என்ற ரீதியில் கைவிடப்பட்டனர். காணமல் போனவர்கள் விடயத்தில் இறப்புப் பத்திரம் கொடுப்பதற்கு சுமார் 5 ஆண்டுக்காலம் எடுக்கின்றது.

இதனால் கணவனை இழந்தும் அரசு கொடுக்கும் பண[illegible]த எடுக்க முடியாது [illegible]வ ள் கச்சேரியைச் [illegible]து பரிதாபமாக [illegible].

இதனால் கணவனை இழந்தவர்களிலும் அதிர்ஷ்டசாலிக்கே இந்த நிவாரண உதவி கிடைத்து வருகின்றது.

மற்றையோர் செய்வதறியாது திகைத்து நிற்கிறனர். இந்த அபலைகள் விடயத்தில் கச்சேரி ஊழியர்களும் வழிமுறைகள் சொல்லி நெறிப்படுத்துவது இல்லையென்றும் புகார் சொல்லப்பட்டது.

# சென் பற்றிக்ஸ் 6 விக்கெட்டுகளால் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் கடந்த வாரம் நடைபெற்ற விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 68 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டி ஓட்டம் எடுக்காமல் 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வேகப் பந்து வீச்சாளர் அன்ரனிப்பிள்ளை முதல் ஓவரிலேயே ஓட்டம் ஏதும் கொடுக்காமல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஓர் புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

சென் பற்றிக்ஸ் முதல் இன்னிங்சில் மொத்தம் 101 ஓட்டங்களைப் பெற்றது. விஜேந்திரா 22 ஓட்டங்களையும், ஜே.பி. பாஸ்கரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரி 2 ஆவது இன்னிங்ஸில் மொத்தம் 133 ஓட்டங்களைப் பெற்றது. றிச்மன் 33 ஓட்டங்களையும், மகிந்தா 35 ஓட்டங்களையும் ஜெயசீலன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

எம். என். ஜி. அன்ரனிப்பிள்ளை 5 விக்கெட்டுகளையும் ஏ. ஐ. ஆர். இன்பசோதி 2விக்கெட்டுக்களையும் அகிலன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் 2-வது இன்னிங்ஸ் துடுப்பாட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்துள்ளது.

இக்கோஷ்டியின் துடுப்பாட்டக் காரர்களான இன்பஜோதியும் விஜேந்திராவும் சோடி சேர்ந்து மின்னல் வேகத்தில் ஓட்டங்களைச்சேகரித்தது குறிப்பிடத்தக்கது. இன்பஜோதி 36 ஓட்டங்களையும் விஜேந்திரா 25 ஓட்டங்களையும் பெற்றனர். பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றார். சென்பற்றிக்ஸ் 4 விக்கட்டுகள் நஷ்டத்திற் 102 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## கரப்பந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி உதவியரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் முறையே எதிர்வரும் சனி, ஞாயிறு, கிழமைகளில் நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்டப் போட்டி நெல்லியடி ம. ம. வித்தியாலய மைதானத்திலும் வலைப்பந்தாட்டப் போட்டி கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரிமைதானத்திலு ம ந டை பெறவுள்ளன. இப் போட்டியில் சரவெட்டி விளையாட்டாளர் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களே பங்குபற்றவுள்ளன. (18)

## இலங்கையருக்கு இந்திய புலமைப் பரிசு

(கொழும்பு)

இந்திய பல்கலைக் கழகங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் கல்விபயில 500 புலமைப் பரிசில்களை இந்திய அரசு இலங்கையருக்கு வழங்கியுள்ளது. இத் தகவலைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இப்புலமைப் பரிசில்களில் 100 பட்டப்பின்படிப்பை மேற்கொள்வதற்கும், 400 பட்டப் படிப்பு கற்கை நெறிகளுக்கும் வழங்கப்படவுள்ளனவாம்.


ஈழநாதமே!
உன் புகழ் வையகம் எங்கும்
வளர்க! ஓங்குக!!

சகலவிதமான பெயின்ற் வகைகளுக்கும்
உத்தரவுபெற்ற
விற்பனையாளர்கள்

டியூக்கோ,
டியூலக்ஸ்,
பென்ரலைற்

**சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்**

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
70/1, Manipay Road, Jaffna.
(B 118)



**Apprentice of Pharmacist**

BASIC QUALIFICATION:
Written Knowledge in English

PERIOD OF COURSE: 6 MONTHS
Registration of Pharmacist (External)

*medical College Council Colombo*

Registration Made by:
SAYI MEDICAL ACADAMY.
Date of Class 19-03-1990


## ஜனசவியத் திட்டத்தில் மேலும் சிலர்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் சில பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 6963 பேர், யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசவிய திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர, வேறு பிரிவுகளில் ஜனசவியத் திட்டம் கொண்டு வரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## சப் ஏஜன்சிக்காரர் மீது விடுதலைப் புலிகள் விசாரணை

வவுனியா பெப்ரவரி 28

புலிகளுக்குக் கொடுத்த


# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



ஈழத் தமிழர்களுக்கு நாதமாக விளங்கும்
ஈழநாதமே வாழ்க! வாழ்க!!

**யாழ். ப. நோ. கூ. சங்கம்**

கூட்டுறவுக் கொள்கைகளில் தளராது சேவையளிக்கும்

**யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தில்**

நிறைந்த பயனைப் பெற இன்றே அங்கத்தவராகச் சேருங்கள்

எமது முதன்மையான சேவைகள்:

- பாவனையாளர் நுகர்ச்சிக் கடன் திட்டம்
- சேமிப்புத் திட்டம்
- ஓய்வூதியக் கொடுப்பனவுகள்
- நுகர்ச்சிப் பொருள் மொத்த, சில்லறை விற்பனை
- அச்சக வேலைகள்
- ஒப்பந்த வேலைகள்
- சமூக கலை, கலாசார சேவைகள்

அங்கத்தவராகச் சேர்ந்திட உடனே உங்கள் பகுதிக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்கட்கு:
யாழ். ப. நோ. கூ. சங்கம்,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B - 137)



பனம் பொருட்கள் மற்றும் பிரதேச ரீதியான

**உற்பத்தியாளர் கவனத்துக்கு**

பனம் உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை ஊக்குவித்தல் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை 10-03-90 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல: 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ப. அ. சபையின் சந்தைப்படுத்தும் பகுதிக் காரியாலயத்தில் ஒழுங்கு செய்துள்ள கலந்துரையாடலில், ப. அ. சபைக்கு பனை உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை வழங்குவோர்களும், இவ்வுற்பத்திகளைச் சந்தைப்படுத்த உத்தேசித்துள்ளவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். உற்பத்தியாளர்கள் மாதிரிப் பொருட்களுடனும் மற்றும் அவற்றின் விலை விபரங்களுடனும் தயவுசெய்து சமூகம் கொடுக்கவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

(B - 84)


## புழுக்கொடியல் கொள்வனவு

Apprentice of Pharmacist

BASIC QUALIFICATION:
Written Knowledge in English

PERIOD OF COURSE: 6 MONTHS
Registration of Pharmacist (External)

*medical College Council*
*Colombo*

Registration Made by:
SAYI MEDICAL ACADAMY.
Date of Class 19-03-1990

CONTACT:
Dr. V. P. Sundararajan
SAYI MEDICAL ACADAMY
No. 10, POINTPEDRO ROAD,
JAFFNA.

## மேலும் சிலர்

(யாழ்ப்பாணம்)
யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் சில பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 6963 பேர், யாழ். உதவி அரசாங்க அதி பர் பிரிவில் அறிமுகப்படுத் தப்பட்ட ஜனசவிய திட்டத் தில் சேர்த்துக்கொள்ளப்பட் டுள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் யாழ். உகவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர, வேறு பிரிவு களில் ஜனசவியத் திட்டம் கொண்டு வரப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. (தி)

## சப் ஏஜன்சிக்காரர் மீது விடுதலைப் புலிகள் விசாரணை

வவுனியா பெப்ரவரி 28
பல இளைஞர்களிடமும், சவூதி அரேபியாவில் வேலை பெற்றுத் தருவதாகச் சொல் லிப் பல இலட்சம் ரூபாய்க ளை மோசடி செய்ததாகச் சந்தேகப்படும் சப் ஏஜன்சி ஒருவர் சமீபத்தில் விடுதலைப் புலிகளின் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டார்.

வடமராட்சியில் இருந்து பல இளைஞர்கள் பம்பைமடு வுக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந் தே மேற்படி சந்தேக நபர்மீது விசாரணை செய்யப்பட்டது. இவர் திக்கம் என்ற இடத் தைச் சேர்ந்தவர் என்ற விட யம் தெரியவந்தது.

பம்பைமடுவில் இவர் ஏக் கர் கணக்கில் உழுந்துச் செய் கை புரிந்து வந்தார் என்றும் இப்பணம் அப்பாவி இளைஞர் களிடமிருந்து கறக்கப் பட்ட தாகவும் தெரியவருகின்றது.

பனம் பொருட்கள் மற்றும் பிரதேச ரீதியான
## உற்பத்தியாளர் கவனத்துக்கு

பனம் உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை ஊக்குவித்தல் தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை 10-03-90 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல: 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ப. அ. சபையின் சந்தைப்படுத்தும் பகுதிக் காரியாலயத்தில் ஒழுங்கு செய்துள்ள கலந்துரையாடலில், ப. அ. சபைக்கு பனை உற்பத்திகள் மற்றும் பிரதேச ரீதியான உற்பத்திகளை வழங்குவோர்களும், இவ்வுற்பத்திகளைச் சந்தைப்படுத்த உத்தேசித்துள்ளவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். உற்பத்தியாளர்கள் மாதிரிப் பொருட்களுடனும் மற்றும் அவற்றின் விலை விபரங்களுடனும் தயவுசெய்து சமூகம் கொடுக்கவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

(B-84)

## புழுக்கொடியல் கொள்வனவு

தற்போதைய புழுக்கொடியல் காலபோகத்தில் பனை அபிவிருத்திச் சபை பெருமளவில் புழுக்கொடியல்களை நியாயமான விலையில் கொள்வனவு செய்து வருகின்றது. புழுக்கொடியல்களைக் கையிருப்பில் வைத்திருப்பவர்கள் உடனடியாக இல: 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ப. அ. சபையின் சந்தைப் படுத்தும் பகுதியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். மேலும் தரமான பிற பனம் உற்பத்திகளும் கொள்வனவு செய்யப்படும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

(B - 85)

வீர வேங்கைகளே வருக வருகவென வாழ்த்துகிறோம்!

# தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

வாடிக்கையாளர்களுக்கு நற்செய்தி

எமது உற்பத்திகள் தரமானவை. பனம் சீனி, பனம் சாராயம், பனம் கள்ளு என்பன சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட இன்றைய நிலையில் உயர்ந்த நிலையைப் பெற்றுள்ளது.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்,
அச்சுவேலி.

B.136

எங்கள் தமிழும் தாயகமும் எமதே என முரசறைந்து வருவாய் ஈழநாதமே!

# ஸ்ரீ தாமோதர விலாஸ்
சைவ உணவகம்

Shree Thamothara Villas
VEGETARIAN RESTAURANT
239, K. K. S. Road, Jaffna.
தொலைபேசி 23065

B.135

சிந்தனைக்கு

எற்றற் குரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து.

திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 03 - 03 - 90

# இரு திருட்டுக்கள்!

"நாடு எக்கேடு கெட்டாலென்ன நம்ம வீடு நிறைஞ்சாப் போதும்" சமூக விரோத மனப்பான்மை சிலரிடம் வளர்ந்துகொண்டே போகிறதென்பதற்கு காடுகளில் கள்ளமரம் வெட்டுவதும் நகரங்களில் தந்திக் கம்பிகள் வெட்டித் திருடுவதும் தக்க சான்றுகளாகும்.

காடுகள் வளர்ந்தால்தான் நாட்டில் மழை பெய்யும். மழை பெய்தாலே பயிர் வளரும். நாடு செழிக்கும்.

இந்திய வானொலி தினமும் காடு வளர்ப்போம் என்று உபதேசம் செய்துகொண்டிருக்கிறது. பல நிகழ்ச்சிகளையும் இந்திய வானொலியும் தொலைக் காட்சியும் மக்களுக்கு அளிக்கிறது.

மரம் வளர்ப்பது, தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதெல்லாம் இந்திய மக்களுக்குத்தான்.

ஈழத்துக்கு வந்த இந்திய இராணுவம் "பயங்கரவாதிகளை" ஒழிக்கிறோம் என்று கூறிக்கொண்டு ஈழத்திலுள்ள காடுகள் பலவற்றை அழித்துத் தொலைத்தனர்.

இது போதாதென்று சுலபமாகப் பணம் சம்பாதிப்பதற்கு காடுகளிலுள்ள விலைமதிப்பற்ற மரங்களைச் சமூகத்தைப்பற்றியோ, நாட்டைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் கள்ளமரம் வெட்டுவோர் ஒருபுறம் அளிக்கத் தொடங்கினர்.

விடுதலைப் புலிகள்'' காட்டு மரங்களைக் களவாக வெட்டுவோர்மீது கடும் நடவடிக்கை" என்று எச்சரிக்கை செய்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்தால் முழுக்காடுமே அழிந்திருக்கும்.

அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள் நடப்பட வேண்டும். காடு வளர்க்கப்பட வேண்டும். இல்லையேல் நாடு பாலைவனமாகிவிடும்!

இப்பொழுது உலகம் சுருங்கி வருகிறது. காலைச் சாப்பாடு இலங்கையிலும் மதிய உணவு இலண்டனிலும் இரவுச் சாப்பாடு நியுயோர்க்கிலும் ஒருவர் சாப்பிடக் கூடியதாகப் பயணம் சுலபமாகிவிட்டது.

இதுபோல் நியுயோர்க்கிலுள்ள மகளுடையும்'

# மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் அவலநிலை

(சித்தங்கேணி)

''1600 மாணவர்கள் கல்வி பயிலும் எமது பாடசாலையில் ஒரு மாணவன் பயன்படுத்தக் கூடியளவிற்குக் கூட மலசல கூட வசதிகள் இல்லை. இது பற்றிப் பல தடவைகள் கல்வித் திணைக்களத்திற்கும், பொது ஸ்தாபனங்கள் பலவற்றிற்கும் எடுத்துக் கூறியும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.''

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் திரு. அ. மு. அருணாசலம் கவலையுடன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது.

எமது பாடசாலை 150 வருடப்பழைமை வாய்ந்தது. ஆனால் இங்கு இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டிடங்களே இருக்கின்றன. அப்போது 380 மாணவர்கள் மாத்திரம் கல்வி கற்றார்கள். ஆனால் இன்று 1600 மாணவர்கள் கற்கிறார்கள். எமக்கு 38 வகுப்பறைகள் தேவை ஆனால் 26 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. ஏனைய மாணவர்கள் மர நிழல்களிலும் விறாந்தையிலும் கற்கிறார்கள் இந் நிலை மாற பெற்றோர்கள் உதவ முன்வர வேண்டும்.

பாடசாலை இணை உப அதிபர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் தனது உரையில் கூறியதாவது.

யாழ் மாவட்டத்தில் தேசிய தலைவர்களின் பெயரில் இயங்கும் பெரிய கல்லூரிகளில் வகுப்பறைகள் காலியாக இருந்து கட்டாந்தரை மாடுகள படுத்துறங்க வசதி செய்யப்படுகிறது. ஆனால் 1600 மாணவர்கள் கல்வி பயிலும் எமது பழைமை வாய்ந்த மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கட்டிட வசதிகளின்றி மாணவர்கள் மர நிழல்களிலும் விறாந்தைகளிலும் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த அவல நிலையைப் போக்குவதற்கு பெற்றோர்களாகிய நீங்கள் முன்வர வேண்டும்.

வடபகுதியில் எந்தப் பாடசாலைகளிலும் காண முடியாதவாறு பெருந்திரளாக நீங்கள் இங்கு வருகை தந்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

சில பாடசாலைகளில் பெற்றோர் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் பயில விட்டுவிட்டு பதவி பெறும் நோக்குடன் நலன் விரும்பி என்ற பெயரில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களை நாடுகின்றவர்கள் மலிந்த இக்காலத்தில் நீங்கள் இங்கு இதயசுத்தியுடன் உங்கள் பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டு பெருந்திரளாக இக்கூட்டத்திற்கு வருகை தந்தமை எமது ஆர்வத்தைத் தூண்டுகிறது. உங்கள் பாடசாலையில் நீங்கள் கொண்ட பற்றுக்கும் பாசத்திற்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகும்.

அரசியல் தலைவர்களையும், கல்விமான்களையும் உருவாக்கிய இக்கல்லூரி இன்று கட்டிட வசதிகளின்றி அநாதரவாக இருப்பது கவலைக்குரியதாகும் என்றார்.

# மண்டைதீவிற்கு மீண்டும் பஸ்சேவை நடக்குமா?

## மக்கள் மடல்

ஐயா,

மண்டைதீவிற்கு 1986 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையுடன் மண்டைதீவு பிரதான வீதி மூடப்பட்டு இ. போ. ச சேவையும் நிறுத்தப்பட்டது. பின்பு 1987 ஆம் ஆண்டில் வீதி திறக்கப்பட்ட போது மற்றைய தீவுப் பகுதிச் சேவைகள் நடாத்தப்பட்டன ஆனால் இச் சேவையை ஆரம்பிக்கும்படி பல பொது ஸ்தாபனங்கள் இ. போ. சவைக் கேட்டபோது அசமத்தனமான காரணங்கள் கூறப்பட்டன. இப்போது வீதி ஓரளவு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பல பொது ஸ்தாபனங்கள் நியாயமான கோரிக்கையான 14 தடவைகள் சேவையாற்றியஇச்சேவையை குறைந்த பட்சம் 5 தடவைகளோ அல்லது அதற்குக் குறைந்த தடவைகளான பாடசாலைசேவை, தபால் சேவை, வைத்தியசாலை சேவைகளையாவது சேவையாற்றும்படி கேட்டும், இ.போ ச. மேலதிகாரிகள் இதில் அக்கறை கொண்டதாக தெரியவில்லை. பல பிரயாணிகள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் சன நெரிசலுடன் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் சிறிய மினி வான்களில் பண்ணை வீதியினூடாக பிரயாணம் செய்ய வேண்டிய நிலைக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே பிரயாணிகளும் இவ்விடயம் தொடர்பாக இ.போ ச. மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இதனை ஒரு முறை நேரில் வந்து கண்டறிந்து கொள்வார்களா? அல்லது மீண்டும் சேவையை நடாத்துவார்களா?

ந. மோகனராஜ்
(செயலாளர்)
கிராம அபிவிருத்திச் சங்கம்
மண்டைதீவு தெற்கு
மண்டைதீவு.

# இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**நிக்கவரெட்டியா**

கே. செல்வராணி யா. சங்கானை சைவப்பிரகாச வித்.

**குருநாகல்**

செல்வி கே. செல்லத்துரை யா. பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி, செல்வி ஆர். தனலட்சுமி யாழ். சென் சாள்ஸ் ம. வித்., செல்வி ரி. ஜோர்ஜ் யா. பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி, செல்வி. வீ. கனகமணி யா. மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

**குளியாப்பிட்டி**

செல்வி சிவசோதி பொன்னையா யா. வீமன்காமம் ம. வித்., திரு. கிருஷ்ணபால சுப்பிரமணியம் சென். ஜேம்ஸ் மகளிர் மகா வித்., பீ. செந்தில் நாதன் யா. உரும்பராய் இந்துக் கல்லூரி, ஏ. இராமநாதன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**சிலாபம்**

பி. விசுவநாதன் யா. அச்செழு சைவப்பிரகாச வித்., திரு. சிவஞான சுந்தரம் யா. கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்.

**புத்தளம்**

க. பா., செல்வி. என். சுபத்திரா யா. டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி, திருமதி புவனேஸ்வரி பொன்னம்பலம், யா. யாழ்ரன் கல்லூரி, திரு. பீ. வின்சென்ட் யா மண்டைதீவு மகா வித்., ரீ. பாலச்சந்திரன் யா. கனகரத்தினம் ம. ம. வித்.

**ஊவா மாகாணம்**

பே. பிரேமகாந்தன் யா. சிதம்பராக் கல்லூரி, செல்வி. சரோஜா ஐயங்கன் யா. குடமியன் அ. த. க. பா. வரணி எஸ். விவேகானந்தன் யா. மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்., எம். ஏ. அல்பிரட் யா. பண்டத்தரிப்பு யசிந்தா றோ. க. த. க. பா. ஜி. மகிழ்ச்சிகரன் யா. ஆனைப்பந்தி மெ. மி. த. க. பா., செல்வி கே. உமாதேவி யா. கோப்பாய் தெற்கு றோ. க. த. க. பா., திருமதி ஜே. அசோக்குமார், யா. யாழ். மத்திய கல்லூரி.

**சப்பிரகமுவா**

திருமதி சிவகலா இரத்தின கோபால் யா. பண்ணாகம் மெய்கண்டான் வித்.

**வடமத்திய மாகாணம்**

சி. வி. சிவகாமி யாழ். இந்துக் கல்லூரி, என். சு

# ஊர்சுற்றி எழுதுவது

திருகோணமலையிலிருந்து நேற்றுக் காலை நண்பர் ஒருவர் வந்தார். வந்திறங்கியதும் ''அப்பாடா'' என்று நிம்மதியாக மூச்சு விட்டார்.

'என்ன மூச்சுப் பெரிசா இருக்கு' என்று கேட்டேன்.

இப்பதான் கொஞ்சம் நிம்மதி திருமலையில் இப்ப மாலை ஐந்தாறு மணிக்கெல்லாம் வீட்டைப் பூட்டிக் கொண்டு மூச்சு விடக்கூடப் பயந்து கொண்டிருக்கிறோம். திடீரென்று வீடுகளுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்து பணம் நகைகளைக் கொள்ளையடிக்கிறார்கள். நகை இல்லையென்றால் வீட்டுக்காரரை நையப்புடைக்கிறார்கள். வீதியில் சற்று இருட்டியபின் போகவே முடியாது. ஆயுதங்களுடன் நின்று பாக்கெற்றிலுள்ளவற்றைப் பிடுங்கிக்கொண்டு விடுகிறார்கள். பாக்கெட்டில் எதுவும் இல்லையென்றால் அடிக்கிறார்கள். இது மட்டுமா வீதிகளில் நல்ல சைக்கிள்களில், மோட்டார் சைக்கிள்களில் போனால் அவற்றையும் பிடுங்கி வாகனங்களில் ஏற்றிக் கொண்டுபோய் விடுகிறார்கள். இப்பொழுது பெண்கள் எல்லாம் தாலியிழந்தவர்கள் போல கழுத்தில் ஒன்றுமே இல்லாமல் தா காட்சியளிக்கிறார்கள். என்று மூச்சு விடாமல் சொன்னார் நண்பர்.

யாழ்ப்பாணத்திலும் சில வாரங்கள் இதே நிலைதான் இருந்தது. அவர்கள் போய்ச் சேர்ந்து விட்டார்கள் என்றேன்.

அங்கும் ஐ. பி. கே. எவ் போகும் போது இவர்களும் பின்னால் போவதற்கு ஆயத்தமாகத்தான் இப்படிக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது என்றார் நண்பர்.

மாகாண முதல் வரும்

இது போதாதென்று சுலபமாகப் பணம் சம்பாதிப்பதற்கு காடுகளிலுள்ள விலைமதிப்பற்ற மரங்களைச் சமூகத்தைப்பற்றியோ, நாட்டைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் கள்ளமரம் வெட்டுவோர் ஒருபுறம் அளிக்கத் தொடங்கினர்.

விடுதலைப் புலிகள்'' காட்டு மரங்களைக் களவாக வெட்டுவோர்மீது கடும் நடவடிக்கை'' என்று எச்சரிக்கை செய்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்தால் முழுக்காடுமே அழிந்திருக்கும்.

அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள் நடப்பட வேண்டும். காடு வளர்க்கப்பட வேண்டும். இல்லையேல் நாடு பாலைவனமாகிவிடும்!

இப்பொழுது உலகம் சுருங்கி வருகிறது. காலைச் சாப்பாடு இலங்கையிலும் மதிய உணவு இலண்டனிலும் இரவுச் சாப்பாடு நியுயோர்க்கிலும் ஒருவர் சாப்பிடக் கூடியதாகப் பயணம் சுலபமாகிவிட்டது.

இதபோல் நியுயோர்க்கிலுள்ள மகளுடனும்' லண்டனிலுள்ள மகனுடனும், யாழ்ப்பாணத்திலிருந்தே தொடர்பு கொண்டு பேசக்கூடிய அளவுக்கு தொலைத் தொடர்புச் சேவை அபிவிருத்தியடைந்திருக்கிறது.

இந்த வசதிகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியாத துர்ப்பாக்கியம்.

தந்திக்கம்பிகளைத் திருடிச் சுலபமாகப் பணத்தைச் சம்பாதித்து விடலாம். ஆனால் நாம் வெகுதூரம் உலகிலிருந்து தூரப் போய்விடுகிறோம்.

தந்திக்கம்பியைத் திருடுபவர்களும் திருட்டுக் கம்பிகளை வாங்குபவர்களும்கூட தொடர்பின்மையால் பாதிக்கப்படுகிறார்களென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்விரு திருட்டுக்களும் நம்மை வெகுதூரம் பல வழிகளிலும் பின்னடையச் செய்து விடுகின்றன.

இத்திருடர்கள் தாங்களாகத் திருந்த வேண்டும். இல்லையேல் மக்கள் திருத்த வேண்டும்.

## ஊழியரின் ஒத்துழைப்பால் நெருக்கடி தனிக்கப்படுகின்றது

(சுதுமலை)

வலி-தென் மேற்குபிரதேச சபையின் மின்சாரப் பகுதியில் கடமையாற்றும் ஊழியர்கள் பற்றாக்குறையாக இருக்கின்றனர்குறைந்தது பத்துப்பேரான வேலைக்குத் தேவைப்படுமிடத்தில் நான்கு பேர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். அண்மைக்கால வன்முறைச் சம்பவங்களின் போது சேதமடைந்த பழுதடைந்த மின்சார இணைப்புக்களைச் செம்மைப்படுத்துவது இதனால் தாமதமாகின்றது. இது பற்றி இச்சபையின் மின் அத்தியட்சகர் மேலும் தெரிவிக்கையில்,நாளாந்த, சாதாரண மின்பராமரிப்பு வேலைகளைக் கவனிக்கவே இந்த ஊழியர்கள் போதாது இருக்கும் போது அவசர திருத்த வேலைகளைச் செய்து முடிப்பது பெரும் சிரமமாகவே இருக்கின்றது. இருந்தும் எமது ஊழியர்கள் காலத்தையும் சிரமத்தையும் பாராமல் தற்கால சூழ்நிலையைக்கருத்தில் கொண்டு கடமையாற்றுவதால் வேலைகளை ஓரளவாவது செய்து முடிக்கக் கூடியதாக இருக்கின்றது என்றார். (19)

## பல்கலைக் கழகத்தில் நூல் வெளியீடு

(யாழ்ப்பணம்)

யாழ். பல்கலைக் கழகக் கலை வட்ட ஆதரவில் நந்தி எழுதிய 'நம்பிக்கைகள்' நாவல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக் கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இம்மாதம் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். இவ்விழாவில் பேராசிரியர் கா.சிவத்தம்பி உட்பட பலர் உரையாற்றவுள்ளார்கள் (தி)

நடவடிக்கையுடன் மண்டைதீவு பிரதான வீதி மூடப்பட்டு இ.போ.ச சேவையும் நிறுத்தப்பட்டது. பின்பு 1987 ஆம் ஆண்டில் வீதி திறக்கப்பட்ட போது மற்றைய தீவுப் பகுதிச் சேவைகள் நடாத்தப்பட்டன ஆனால் இச் சேவையை ஆரம்பிக்கும்படி பல பொது ஸ்தாபனங்கள் இ.போ.சவைக் கேட்டபோது அசமத்தமான காரணங்கள் கூறப்பட்டன. இப்போது வீதி ஓரளவு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பல பொது ஸ்தாபனங்கள் நியாயமான கோரிக்கையான 14 தடவைகள் சேவையாற்றியஇச்சேவையை குறைந்த பட்சம் 5 தடவைகளோ அல்லது அதற்குக் வே, பாடசாலை மாணவர் வில்லை. பல பிரயாணிகள் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் சன நெரிசலுடன் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் சிறிய மினி வான்களில் பண்ணை வீதியினூடாக பிரயாணம் செய்ய வேண்டிய நிலைக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே பிரயாணிகளும் இவ்விடயம் தொடர்பாக இ.போ.ச. மேலதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது இதனை ஒரு முறை நேரில் வந்து கண்டறிந்து கொள்வார்களா? அல்லது மீண்டும் சேவையை நடாத்துவார்களா?

ந. மோகனராஜ்
(செயலாளர்)
கிராம அபிவிருத்திச் சங்கம்
மண்டைதீவு தெற்கு
மண்டைதீவு.

## அங்கவீனருக்கு இடம் கொடுக்கவேண்டும்

ஐயா!

1-03-90 ஆம் திகதிய, 'ஈழநாதம்' மக்கள் மடல் பகுதியில் தங்கை ஒருவர் எழுதிய கடிதம் படித்தேன்.

அக்கடிதத்தில் பயிலுனர் ஆசிரியர் ஆட்சேர்த்தலில் ஊனமுற்றவர்கட்கு விஷேட புள்ளிகள் வழங்கப்படவேண்டுமென்பது அத்தங்கையின் கோரிக்கையாக இருந்தது

உலக நாடுகள் பலவற்றிலும் உடல் ஊனமுற்றோருக்கென பல்வேறு! சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன- இலவச போக்குவரத்துவசதி - பூரண வரிவிலக்கு- தொழில் வாய்ப்பில் முன்னுரிமை- சமுதாயத்தில் சமஅந்தஸ்த்து- வாழ்க்கைக்குப் போதுமானளவு அரச உதவிப்பணம்- விஷேட தங்குமிட வசதிகள் எனச்சிலவற்றைக் கூறலாம்

எங்கள் நாட்டில் இப்படியான பல்வேறு வசதிகள் இல்லையென்றாலும் ஊனமடைந்தவர்கள் ஆறுதல் அடையக் கூடியவிதத்தில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 27/88 அமைந்துள்ளது

1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி சுற்றறிக்கை அரசசேவையில் (திணைக்கள- கூட்டுத்தாபனம் உட்பட) வெற்றிடங்களை நிரப்பவென ஆட்களைத் தேர்ந்து எடுக்கும்போது 3%மானவர்களை குறிப்பிட்ட தகுதியுடைய அங்கவீனருக்கு வழங்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

இச்சுற்றறிக்கையின் பிரகாரம் ஊனமுற்றேருக்கென விஷேடபுள்ளிகள் வழங்காது- அவர்கள் சிலரை (அடிப்படைத்தகுதி பெற்றோரை) பயிலுனர் ஆசிரியராக நியமனத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

வடமாகாணத்தில் 1000 பயில் நிலை ஆசிரியர்கள் சேர்க்கப்படும்போது அவர்கள் 30 பேர் அங்கவீனர்களினால் நிரப்பப்படவேண்டும்

உண்மை நிலை இவ்வாறு இருக்க பெரிய இடத்தில் இருக்கும்சிறிய மனம்படைத்தவர்களின் அகங்காரப் போக்கும் ஊழல் நிர்வாகமும் ஓரிரு அங்கவீனர்களையாவது பயில் நிலை ஆசிரியராக நியமனம் செய்ய இடம்தராதிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். ஊனமடைந்தவர்களின் புனர்வாழ்வு பற்றியும்- சமூகசேவை பற்றியும் அடிக்கடி அலட்டிக் கொள்வோரும்- அறிக்கைகள் விடுவோரும்- மேடைப்பேச்சாளர்களும் இவ்விடயத்தில் அக்கறை எடுத்துச் செயல் படவேண்டும்.

'ஆசாரி விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடுக்க வேண்டும்' என்ற நிலையிலேயே இன்று உடல் குறைபாடு கொண்டவர்கள் நிலை இருக்கிறது.

அவர்கள் பெரிய இடத்தில் உள்ளவர்களை எப்படி வசியம் செய்வது என்பது தெரியாததால், அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையையே பெரிய இடத்தில் உள்ளவர்கள் நிராகரித்துள்ளார்கள்.

மனிதாபிமான உணர்வும், மானிட நேயமும் கொண்டவர்கள் மேற்படி சுற்றறிக்கையின் பிரதியின், பயில்நிலை ஆசிரியர் நியமனம் செய்வதற்கு அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்களின் பார்வைக்கு சமர்ப்பித்து அங்கவீனர் உத்தியோகம்பெற உதவ வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள
M. அசோகா
பருத்தித்துறை.

சாள்ஸ் ம. வித்., செல்வி ரி. ஜோர்ஜ் யா. பாசையூர் புனித அந்தோனியார் கல்லூரி, செல்வி. வீ. கனகமணி யா. மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

**குளியாப்பிட்டி**

செல்வி சிவசோதி பொன்னையா யா. வீமன்காமம் ம. வித்., திரு. கிருஷ்ணபால சுப்பிரமணியம் சென். ஜேம்ஸ் மகளிர் மகா வித்., பீ. செந்தில் நாதன் யா. உரும்பராய் இந்துக் கல்லூரி, ஏ. இராமநாதன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**சிலாபம்**

பி. விசுவநாதன் யா. அச்செழு சைவப்பிரகாச வித்., திரு. சிவஞான சுந்தரம் யா. கலாநிதி ஆ. தியாகராஜா ம. ம. வித்.

**புத்தளம்**

திருமதி ஐ. பாலச்சந்திரன் யா. சுதுமலை வடக்கு அ. த.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(கொக்குவில்)

யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் இம்ரான்: (சதானந்தன்) பிரம்படி, கொக்குவில் அவர்களுக்கு அஞ்சலி செலுந்தும் கூட்டம் 03.03-1990 ம் திகதி சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 7-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பே. பிரேமகாந்தன் யா. சிதம்பராக் கல்லூரி, செல்வி. சரோஜா ஐயங்கன் யா. குடமியன் அ. த. க. பா. வரணி எஸ். விவேகானந்தன் யா. மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்., எம். ஏ. அல்பிரட் யா. பண்டத்தரிப்பு யசிந்தா றோ. க. த. க. பா. ஜி. மகிழ்ச்சிகரன் யா. ஆனைப்பந்தி மெ. மி. த. க. பா., செல்வி கே. உமாதேவி யா. கோப்பாய் தெற்கு றோ. க. த. க. பா., திருமதி ஜே. அசோக்குமார், யா. யாழ். மத்திய கல்லூரி.

**சப்பிரகமுவா**

திருமதி சிவகலா இரத்தினகோபால் யா. பண்ணாகம் மெய்கண்டான் வித்.

**வடமத்திய மாகாணம்**

சி. வி. சிவகாமி யாழ். இந்துக் கல்லூரி, எஸ். நடராசா யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஏ. சி. சாகுல்ஹமீத் யா.வேலணை சரஸ்வதி வித்., செல்வி தவேந்திரமலர் யா. புனித ஹென்றி கல்லூரி இளவாலை, திருமதி இ. ஜெயராசா யா. உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, என். கனகலிங்கம் யா. கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி, செல்வி. ஆர். மொஹதீன் யா. கதீஜா ம. வித். யாழ்ப்பாணம், செல்வி. ஐ. மஞ்சுளா, யா. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(மிகுதி நாளை)

## யாழ். செயலகத்தில் தராசுகளுக்கு சீல் வைக்கப்படுகின்றது

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில் கடந்த 12.ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தராசுப் படிகளுக்குச் சீல் வைக்கும் வேலைகள் மிகத் துரிதமாக இன்று வரை நடைபெற்றுவருவதாக யாழ். உதவ உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. வி. நடேசபிள்ளை அறிவித்துள்ளார்.

இவ் அலுவலகம் முன்னர் அமைந்துள்ள பழைய செயலகக் கட்டிடத்திலேயே மீண்டும் இயங்கி வருகிறது.

ஒரு கிலோ தொடக்கம் இரண்டு கிலோவரை படிகளுக்கு ரூபா 3ம், சின்னத் தராசு படிகளுக்கு ரூபா 3ம் 100 கிலோ தராசு படிகளுக்கு ரூபா 20ம் மேடைத் தராசு படிகளுக்கு ரூபா 40ம் முத்திரை இட வருபவர்கள் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி உடன் தங்கள் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அனேக வர்த்தகர்கள் தினமும் தமது தராசுகள், படிகள், லீற்றர்கள், மீற்றர் கோல்கள் போன்ற நிறுவைகள் அளவைகள் கருவிகளைத் தினமும் எடுத்துவந்து முத்திரையிட்டுச் செல்கின்றனர். தினமும் வேலை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.15 மணிவரையும் முத்திரை இட்டுக் கொடுக்கப்படுகின்றது. செயலகம் வந்து முத்திரை இடத்தவறும் வர்த்தகர்கள், சிறு கடை வியாபாரிகள்மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க திணைக்கள அதிகாரிகள் தயாராக உள்ளனர். என ஆணையாளர் திரு. கே. ஜே. ரூபேந்திரன் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி செயலகத்திலும் இதே போல் வேலை நாட்களில் தராசுப் படிகள் அனைத்திற்கும் முத்திரையிட்டுக் கொடுக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கள் எல்லாம் தாலியிழந்தவர்கள் போல கழுத்தில் ஒன்றுமே இல்லாமல் தான் காட்சியளிக்கிறார்கள். என்று மூச்சு விடாமல் சொன்னார் நண்பர்.

யாழ்ப்பாணத்திலும் சில வாரங்கள் இதே நிலை தான் இருந்தது. அவர்கள் போய்ச் சேர்ந்து விட்டார்கள் என்றேன்.

அங்கும் ஐ. பி. கே. எவ் போகும் போது இவர்களும் பின்னால் போவதற்கு ஆயத்தமாகத்தான் இப்படிக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது என்றார் நண்பர்.

மாகாண முதல் வரும் அமைச்சர்களும் தாங்கள் ஓடிப்போகப் போவதில்லையென்று சொல்லியிருக்கிறார்களே என்றேன்.

அவர்கள் ஓடிப்போக மாட்டார்கள். ஆனால் விமானத்தில் பறந்து போவார்கள் என்று சிரித்தபடியே சொன்னார் நண்பர்.

இவர்கள் மக்களுடன் வாழ வேண்டும் என்ற எண்ணமே இல்லாதவர்கள். மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்வதெல்லாம் மக்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தான்.' என்று சொன்னார் நண்பர்.

கோணேசர் தான் காப்பாற்ற வேண்டும்!.

## ஏல விற்பனையில் கைகலப்பு

வவுனியா பொதுசன நூலகத்தில் இன்று பழைய பத்திரிகைகள், இலக்கியச்சஞ்சிகைகள் ஏலம் விடப்பட்டன. இந்த ஏல விற்பனையின் போது ஏலத்தை விலை கூறிய அரச ஊழியர் ஒருவர்க்கும், வர்த்தகர் ஒருவருக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்த வர்த்தகருக்கும், அரச ஊழியருக்கும் இடையே வாக்குவாதம் கைகலப்பு ஏற்பட்டது. இக்கைகலப்பினால் நூலகச் சுற்றாடலில் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் சில மணிநேரம் ஏல விற்பனை பாதிக்கப்பட்டது

'இலக்கியச் சஞ்சிகைகள் அறிவாளிகட்கும், பள்ளிக்கூடப் பிள்ளைகட்கும் மாத்திரம் விற்பனைசெய்யக்கூடாது. அது வர்த்தகர்க்கும் விற்பனை செய்யப் படவேண்டும் என வர்த்தகர் கோரினார் இக் கோரிக்கையே பின்பு அடிதடியாக மாறியது எனச் சொல்லப்பட்டது.(வ)

ஈழநாதம்

# பாண்டிச்சேரியில் தி. மு. க. பதவியேற்பு கால தாமதமாகுமா?

## திகதியை வெளியிட டி. இராமச்சந்திரன் மறுப்பு

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபையை தி. மு. க கூட்டணி கைப்பற்றியதைத் தொடர்ந்து பாண்டிச்சேரி முதல்வராக திரு. டி. இராமச்சந்திரன் பொறுப் பேற்கிறார். அவரை மந்திரிசபை அமைக்க வருமாறு பாண்டிச்சேரி கவனர் திருமதி சந்திராவதி அழைத்துள்ளார்.

நேற்று காலை ஒன்பது மணிக்கு திருமதி சந்திராவதியை சந்தித்த டி. இராமச்சந்திரன் தான் பாண்டிச்சேரி தி. மு. க. கூட்டணி தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கான கடிதத்தைச் சமர்ப்பித்தார். ஓரேயொரு சுயேட்சை வேட்பாளரான கமலக்கண்ணன் தி. மு. க. கூட்டணிக்கு ஆதரவு கொடுப்பதாகக் குறிப்பிட்ட கடிதத்தையும் டி. இராமச்சந்திரன் கவனரிடம் கொடுத்தார்.

எப்போது முதல்வராகப் பதவியேற்கப் போகிறீர்கள் எனக்கேட்டபோது அதற்கு இராமச்சந்திரன் பதில் கொடுக்க மறுத்துவிட்டார். கவனரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது பதவியேற்பவர்கள் தான் இது தொடர்பாக முடிவு செய்ய வேண்டும் என்றார்.

## 4 மாணவர் சித்தி

(புங்குடுதீவு)

கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் புங்குடுதீவு கொத்தணி பாடசாலைகளில் இருந்து நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்

புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயத்தில் செல்வன் கே. செந்தீவன், செல்வி எம். லோஜி ஆகிய இரு மாணவர்களும், சித்திவினாயகர் வித்தியாலயத்திலிருந்து செல்வன் த. தவரூபன் என்ற மாணவனும் அ. மி. த. க வித்தியாலயத்திலிருந்து செல்வன் சி. மதிவதனன் ஆகிய நான்கு மாணவருமே சித்தியடைந்தவர்களாவார்கள். (22)

## நெல்லியடியில் இன்று 4000 ரூபா பெறலாம்

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில் நாளை 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுயதொழில் முயற்சிக்கான ரூபா 4000/- நன்கொடைப் பணத்தினை இதுவரை பெறாதவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. நிவாரணங்களைப் பெறவுள்ள கிராமசேவகர்கள் பிரிவும் குடும்பங்களின் எண்ணிக்கைகளும் வருமாறு:-

மொத்தமாக 150 குடும்பங்கள் இந்த உதவியினை பெறவுள்ளன.

கரவெட்டி மேற்கு 17, கரவெட்டி கிழக்கு 02, கரவெட்டி வடக்கு 05, கரணவாய் தெற்கு 04, கரணவாய் மேற்கு 07, கரணவாய் மத்தி 01, கப்புது 02, உடுப்பிட்டி 15, உடுப்பிட்டி வடக்கு 19, வல்வெட்டி 23, இமயாணன் 29, துன்னாலை கிழக்கு 03, துன்னாலை மேற்கு 20, அல்வாய் கிழக்கு 03.

## 2ஆம் கட்டம் ஆயிரம் ரூபாய்

(பருத்தித்துறை)

வல்லிபுர குறிச்சி - கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 623குடும்பங்களுக்கான இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபாக் கொடுப்பனவானது 4ஆம் திகதி (நாளை) ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறையில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்படவுள்ளன.

## பாலைதீவில் குடிநீர் தட்டுப்பாடு கடைகள் சில திறக்கப்பட்டன

(விசேட நிருபர்)

பாலைதீவில் யாத்திரிகர் குடிநீர் இல்லாமல் சிரமப்படுவதாக தெரிய வந்துள்ளது. அதேவேளை யாத்திரிகர் பெருமளவில் பாலைதீவுக்குச் சென்றிருப்பதால் கடைகள் சிலவும் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

குளிர்பான வகைகள், ஐஸ் கிறீம், கச்சான் கடலை' காப்புக்கடைகள் போன்றவையே வியாபாரிகளால் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த காலங்களில் பாலைதீவில் திரளும் யாத்திரிகர்களது குடிநீர் தேவைகளை யாழ். மாநகர சபை நிதியைப்பெற்று தனியார் ஒருவர் வத்தைகளில் குடிநீரை டாங்கிகளில் எடுத்துச் சென்று விநியோகிப்பது வழக்கம்.

இம்முறை திருநாள் நடைபெற மாட்டாதென்று அறிவித்துள்ளதால் பாலைதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் தம்முடன் குடிநீரை எடுத்துச் செல்லும் நிலைமையால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது. (21)

## பாரதிய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி

பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை ஜனதா அரசுநீடிக்கமசோகா கொண்டுவந்தபோது உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் பெரும்கலவரங்கள் மூண்டதும் குறிப்பிடத்தக்கது.

பாரதிய ஜனதாக் கட்கியின் வெற்றியால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகப் போவது ஜனதாக் கட்சிதான். பாரதிய ஜனதாக் கட்சியின் வெற்றி இந்தியாவில் இன்னும் இனமத பேதங்களை பெருக்குவதற்கே உதவி செய்யும், பஞ்சாப்பிலோ அன்றி காஸ்மீரிலோ பாரதீய ஜனதாக் கட்சியினர் தேசிய முன்னணி அரசின் மென்மையான போக்கை ஆசரிக்கமாட்டார்கள். பாக்கிஸ்தானுடனும் அதே மாதிரியான ஓர் தீவிர போக்கையே கடைப்பிடிக்கும்படி வற்புறுத்துவார்கள். இந்துக்களுக்கு முன்னுரிமைஅழிக்சப்படும் பட்சத்தில் மேலும் சில பகுதிகளில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படலாம். இதனால் இந்தியாவின் ஒற்றுமைக்கு பங்கம் வரவேண்டிய நிலை தோன்றலாம்.

## உடற்பயிற்சிப் போட்டி

(தீவுப்பகுதி)

வேலணை கோட்டக்கல்விப் பிரதேச உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் ஆறாம்திகதி 06 - 03 - 90 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக வேலணைக் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் திரு. தி. புலேந்திரன் கலந்து கொள்கின்றார். (15)

## குப்பிளானுக்கு பதினையாயிரம் ரூபா

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள குப்பிளான் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அப்பகுதியில் விவசாயம், கால்நடை

## கச்சேரி பட்டதாரிகளுக்கு ஏப்ரலில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ். செயலகத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் முப்பத்துநான்கு பட்டதாரிகளுக்குமான பரீட்சை ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் வடக்கு-கிழக்கு மாகாணசபையால் செயலகத்தில் வேலை பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது தெரிந்ததே.

மேற்படி பரீட்சையொன்று வைக்கப்பட்டு, என்னென்ன பகுதிகளில் சித்தி பெறுகிறார்கள் என்பதைக் கணித்ததன் பின்பே இப்பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## பயிற்சிப் பரீட்சை

(சித்தங்கேணி)

1989 டிசம்பர் மாத க. பொ. த (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள

## போதைவஸ்து ஒழிப்புச் சங்கத்திற்கு முலவைப் பகுதி மக்கள் ஒத்துழைப்பு

(விசேட நிருபர்)

குருநகர் போதைவஸ்த்து ஒழிப்புச் சங்கத்திற்கு யாழ். இராசாவின் தோட்ட வீதி, முலவைப்பகுதி மக்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அப்பகுதிகளில் பெரும்பாலானோர் சட்டவிரோத போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அதன் காரணமாகப் பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும்பெண்கள்குறிப்பாக மாணவிகள் பாதிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

குடும்பங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் அரக்கனான போதைப்பொருள் விற்பனைகளைத் தடுத்து விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனை வழங்கிப் பொது மக்களைக் காக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

விரைவில் அப்பகுதிகளில் போதைப்பொருள் தடுப்புச் சங்கக் கிளையொன்று நிறுவி ஆவன செய்யப்படுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது 21)

## குப்பிளானில் வில்லிசை

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்ணினயின் கலாச்சார பிரிவினரின் '' நடந்து வந்த பாதையிலே...'' வில்லிசையும், நாடகமும் வியாழன் மாலை குப்பிளான் பிள்ளையார் கோவில் முன்றலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். (26)

## நெல்லியடி வங்கிகளில் பொலிஸார்

(கரவெட்டி)

நெல்லியடி வங்கிப் பாதுகாப்புக் கடமைகளில் தற்சமயம் இலங்கைப் பொலிஸார் ஈடுபட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

நீண்டகாலத்தின் பின் துப்பாக்கிகள் சகிதம் கடமையாற்றும் இவர்களை பலரும் வேடிக்கையாகப் பார்ப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. (18)

## வாகன வரி அறவிட முடிவு

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான வரிச்சலுகை இம்மாத இறுதியுடன் முடிவடையும் என யாழ். செயலக வாகன வரி அறவீட்டாளர் பிரிவிலிருந்து தெரிய வருகிறது.

மார்ச் மாத இறுதிக்குள் அனைத்து வாகனச் சொந்தக்காரர்களும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டுக்கான வரியை சலுகையுடன் செலுத்தலாம். அதற்குப் பிந்துவோர் முந்தைய வருட வரியைச் செலுத்துவதுடன் இவ் வருடத்துக்கான வரியையும் செலுத்தப் பணிக்கப்படுவர் என்றும் தெரி

## கனரக வாகனங்கள் மீதான தடை பின்போட பட்டுள்ளது

(கொழும்பு)

கனரகவாகனங்கள், கொள்கலன்களுடன் வாகனங்கள், லொறிகள் என்பவை கொழும்பு நகருக்குள் காலை மாலை பிரவேசிப்பது, வெளியேறுவது தொடர்பான தடை ஒருவார காலம் பிற்போடப் பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக போக்கு வரத்து பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரி. பேரின்பநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

## 2 ஆம் ஆண்டு வீர அஞ்சலி



வீர ஜனனம் 20.01 1961

வீர மரணம் 03.03.1988

முன்னாள்

பாரதிய ஜனதாக் கட்சி யின் வெற்றியால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகப் போவது ஜனதாக் கட்சிதான். பாரதிய ஜனதாக் கட்சியின் வெற்றி இந்தியாவில் இன்னும் இனமத பேதங்களை பெருக்குவதற்கே உதவி செய்யும், பஞ்சாப்பிலோ அன்றி காஸ்மீரிலோ பாரதீய ஜனதாக் கட்சியினர் தேசிய முன்னணி அரசின் மென்மையான போக்கை ஆசரிக்கமாட்டார்கள். பாக்கிஸ்தானுடனும் அதே மாதிரியான ஓர் தீவிர போக்கையே கடைப்பிடிக்கும்படி வற்புறுத்துவார்கள். இந்துக்களுக்கு முன்னுரிமைஅழிக்சப்படும் பட்சத்தில் மேலும் சில பகுதிகளில் வகுப்புக் கலவரங்கள் ஏற்படலாம். இதனால் இந்தியாவின் ஒற்றுமைக்கு பங்கம் வரவேண்டிய நிலை தோன்றலாம்.

ஆனால் பாரதீய ஜனதாக் கட்சியினர் தேசிய முன்னணி அரசாங்கம் கலைக்கப்படும் அளவிற்குத் தொல்லை கொடுப்பார்களா? என்பதிலும் சிறிதான சந்தேகம் உண்டு. 1977 ஆம் ஆண்டு ஜனதாக் கட்சி ஆட்சி கவிழ்ந்தது. அவர்களுக்கு ஓர் நல்லதொரு படிப்பினை. அத்தோடு தற்பொழுது ராஜஸ்தான் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தங்கள் சட்டசபை அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனதா தள உதவி அவர்களுக்கும் தேவை. ஆகையினால் ஓரளவு ஜனதா தளத்துடன் இணைந்தே போவார்கள் என எதிர்பார்க்கலாம்,

மேலும் மொறாஜி தேசாய் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவியாக இருந்தவர் மறைந்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி. திறமையும், அனுபவமும், ஆளுமையும் மிக்கவர் இந்திரா காந்தி மொராஜி தேசாய் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ''றோ'' வின் துணையுடன் சரண்சிங்கைப் பயன்படுத்தினார். ஆனால் தற்பொழுது காங்கிரஸ் தலைவராக இருக்கும் ராஜீவ் காந்தி அவ்வளவு திறமை மிக்கவர் என்று சொல்வதற்கில்லை. அதே வேளை மொறாஜி தேசாய் போன்று வி. பி. சிங் பலவீனமானவரும் இல்லை. இவ்வாறான நிலையில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் நெருக்கடிகளைத் தோற்றுவிக்குமா அல்லது இந்திரா காங்கிரசை ஓர் நீண்ட காலத்திற்கு அரசியலில்இருந்து ஒதுக்கிவைக்குமா என்பதை எதிர்காலங்களில் பாரதீய ஜனதாக் கட்சி எடுக்கும் நடவடிக்கைகள் தீர்மானிக்கும் என்றால் மிகையாகாது.

பிரதேச உடற்பயிற்சிப் போட்டிகள் இம்மாதம் ஆறாம்திகதி 06-03-90 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக வேலணைக் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் திரு. தி. புலேந்திரன் கலந்து கொள்கின்றார். (15)

## குப்பிளானுக்கு பதினையாயிரம் ரூபா

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள குப்பிளான் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அப்பகுதியில் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை ஊக்குவிக்க பதினையாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பணம் வீட்டுத்தோட்டம், ஆடுவளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பனவற்றை மேற்கொள்வதற்கு முப்பது குடும்பங்களிற்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (26)

### காக்கை தீவு......

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

களினால் உறுதிப்படுத்தப்பட்டு மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். காக்கை தீவு துறையைப் பாவிக்கும் ஆனைக்கோட்டை, சாவல்காடு, மானிப்பாய் கிராமத்தைச் சேர்ந்தோர் வரி செலுத்த வேண்டியதில்லை. நவாந்துறை மீனவர்கள் இத்துறைமுகத்தைப் தற்காலிகமாகப் பாவிக்க 50% வரி செலுத்த வேண்டும். இச்சலுகை யாழ். மாநகரசபை ஆனையாளருடன் கதைத்து ஒரு துறைமுகத்தை அவர்கள் பகுதியில் கட்டிக்கொடுக்கப்படும்வரைதான் உண்டு இதைவிட கொண்டுவரப்படும் துவிச்சக்கர வண்டிக்கு ஐம்பது சதமும் மோட்டார் சைக்கிலுக்கு ஒரு ரூபாவும் வரியாக அறவிடப்படும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. (19)

### முறைசாராக்.......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவில் கற்றிருப்பின் பெறுபேற்று அட்டவணை / சான்றிதழ் 6. இந்தியா சென்று மீண்டவராயின் அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட அத்தாட்சிக் கடிதம் 7. தேசிய அடையாள அட்டை 8. புல்ஸ்காப் விடையெழுதும் தாள் (05) 9. உணவுமுத்திரை(இருப்பின்)

பட்டதாரிகளுக்குமான பரீட்சை ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் வடக்கு-கிழக்கு மாகாணசபையால் செயலகத்தில் வேலை பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது தெரிந்ததே.

மேற்படி பரீட்சையொன்று வைக்கப்பட்டு, என்னென்ன பகுதிகளில் சித்தி பெறுகிறார்கள் என்பதைக் கணித்ததன் பின்பே இப்பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## பயிற்சிப் பரீட்சை

(சித்தங்கேணி)

1989 டிசம்பர்மாத க. பொ. த (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்க்கான பயிற்சிப் பரீட்சை ஒன்று 7-3 90 இல் நடைபெறவுள்ளது.

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகம் இக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இப்பரீட்சையை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரம் தெரிவித்துள்ளார். (23)

## பெருந்தோட்டக் காணி பகிர்ந்தளிப்பு

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்திலுள்ள ஏப்பல்கல தோட்டத்தை காணியற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு காணிக்கச்சேரி இம்மாதம் 11ஆம் 12ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு அம்பன்கந்த உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. காணிவழங்கத் தெரிவு செய்யப்படுவோருக்குதலாஒரு ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்படவுள்ளது.

### மினிபஸ் மோதி.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மினிபஸ்சாலும், லாண்ட்மாஸ்டராலும் மோதப்பட்ட மாணவனின் பெயர் ராஜ்குமார் ஆகும். இவர் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியை அண்டியுள்ள பகுதியில் வசிப்பவராவார்.

இப்போது யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் சர்வசாதாரணமாகி விட்டது. வாகனங்களை வேகக்கட்டுப்பாடு இன்றி செலுத்துவோர் தொகை அதிகரித்து விட்டது. வாகனப் போக்குவரத்துக்கள் சீர் செய்யப்படாவிடின் யாழ்ப்பாணம் வீதி விபத்துக்களின் களமாகும்.

மக்கள் வீதிகளில், வாகனங்களில் போக்குவரத்து செய்ய மட்டுமல்ல வீதி அருகால் நடந்து செல்லவும் அஞ்சுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

(விசேட நிருபர்)

குருநகர் போதைவஸ்த்து ஒழிப்புச் சங்கத்திற்கு யாழ். இராசாவின் தோட்ட வீதி, முலவைப்பகுதி மக்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அப்பகுதிகளில் பெரும்பா போதைவஸ்து விற்பனையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அதன் காரணமாகப் பொது மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும்பெண்கள்குறிப்பாக மாணவிகள் பாதிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

குடும்பங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் அரக்கனான போதைப் பொருள் விற்பனைகளைத் தடுத்து விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனை வழங்கிப் பொது மக்களைக் காக்குமாறு கேட்கப் பட்டுள்ளது.

விரைவில் அப்பகுதிகளில் போதைப்பொருள் தடுப்புச் சங்கக் கிளையொன்று நிறுவி ஆவன செய்யப்படுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது 21)

## குப்பிளானில் வில்லிசை

தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்ணியின் கலாச்சார பிரிவினரின் ''நடந்து வந்த பாதையிலே...'' வில்லிசையும், நாடகமும் வியாழன் மாலை குப்பிளான் பிள்ளையார் கோவில் முன்றலில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். (26)

# யாழ். குடாநாட்டில் 33,000 வீடுகள் புனரமைப்பு

## ஐ. நா. குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்கால வன்செயல காரணமாக அழிந்த வீடுகளைப் புனரமைக்க ஐக்கிய நாடுகள் உதவி தாபனம் முன்வந்திருப்பதாக தெரிவிக்கப் பட்டது.

பதினேழு ஆயிரம் வீடுகளைப் புனரமைக்க இந்த ஸ்தபபனம் முன் வந்திருப்பதாகவும் யாழ். குடா நாட்டில் பாதிப்படைந்த வீடுகளைப் புனரமைப்பது சம்பந்தமாக அவற்றைப் பார்வையிட அடுத்த வாரம் மேற்டி தாபனத்தின் குழு ஒன்றுகொழும்பிலிருந்து யாழ்பாணம் வர உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நா. தாபனத்தாரால் யாழ். குடாநாட்டில் முப்பத்து மூவாயிரம் வீடுகள் புனரமைக்கப் படஉள்ளதாகவும் இவ்வருடத்தில் 57 ஆயிரம் வீடுகள் புனரமைக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் மேற்படி தாபனத்துடன் தொடர்புள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (தி)

### இன்று விடுதலை....

(1ம் பக்க தொடர்ச்சி)

ணையின் பின்னர் இன்று மாலை நாலு மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் விடுதலை செய்யப்பட இருப்பதாக விடுதலைப் புலி வட்டாரங்கள் நேற்றிரவு ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தார்கள்.

### ஈழப் பிரகடனம்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அவகாசம் வேண்டுமோ அவ்வளவு காலம் அவகாசம் எடுக்கலாம்'' என்று கூறினார். இலங்கைதான் நட்புறவு ஒப்பந்தம் செய்யவேண்டும் என்று முதலில் கூறியதென்றும் அவர் சொன்னார்.

### பொது மக்கள்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதி வழங்கப்பட்ட போதிலும் அகனை செயற்படுத்த முடியாத இக்கட்டானநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே தயவு செய்து இவ் வீடுகளிலிருந்தும், விளை புலங்களிலிருந்தும் மேற்படி படையினரை வெளியேற்றி பொது மக்கள் இயல்பு வாழ்வைத் தொடர ஆவன செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (18)

### முதலமைச்சர்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணி நடவடிக்கையாக இருக்கலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

# இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும்

''ஈழ ஜனநாயகக் குடியரசில் தங்கியிருக்கும் இலங்கை இராணுவத் துருப்புகள் அனைத்தும் அந்நிய நாட்டுப் படைகள் என்ற முறையில் உடனே வெளியேற வேண்டும் என்று முதல்வர் பெருமாள் கேட்டுக்கொண்டார். இலங்கைப் படைகள் ஈழ ஜனநாயகக் குடியரசின் நிலப்பிரதேசத்திற்குள் தங்கியிருத்தல் என்பது எமது தன்னாதிக்கத்தையும் இறைமையையும் அவமதிக்கும் செயலாகும் எனக் குறிப்பிட்ட முதல்வரிடம் இப்பிரதேச எல்லக்குள் இந்தியப் படைகள் தங்கியிருத்தல் தொடர்பாகக் கேட்டபோது இந்திய இராணுவம் தங்கியிருந்து எமக்கு உதவி செய்யும் என்றார்''. இந்தச் செய்தியை நேற்றைய ஐலண்ட் பத்திரிகைவெளியிட்டிருந்தது.

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்காவிடம் ஈழப் பிரகடனம் தொடர்பாகக் கேட்டபோது அவர் எதையும் கூற மறுத்து விட்டார். ''இது ஒரு அரசியல் விவகாரம்'' என்று மட்டுமே அவர் குறிப்பிட்டார்.

வேடிக்கையாகப் பார்ப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. (18)

## வாகன வரி அறவிட முடிவு

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான வரிச்சலுகை இம்மாத இறுதியுடன் முடிவடையும் என யாழ். செயலக வாகன வரி அறவீட்டாளர் பிரிவிலிருந்து தெரிய வருகிறது.

மார்ச் மாத இறுதிக்குள் அனைத்து வாகனச் சொந்தக்காரர்களும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டுக்கான வரியை சலுகையுடன் செலுத்தலாம். அதற்குப் பிந்துவோர் முந்தைய வருட வரியைச் செலுத்துவதுடன் இவ் வருடத்துக்கான வரியையும் செலுத்தப் பணிக்கப்படுவர் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (லோ)

### மாகாணசபை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைப்பு விவகாரம் தொடர்பாக பத்திரிகையாளர்கள் அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னாவிடம் கேள்வி கேட்டபோது அவர் மாகாணசபை சட்டங்கள் தொடர்பாகத் தமக்குத் தெளிவு இல்லை என்றார்.

இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம் மாகாணசபையை நினைத்த மாத்திரத்தில் ஜனாதிபதி கலைக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள் அப்போது பிரட்மன வீரக்கோன் பதில் கொடுக்கும் போது இது தொடர்பாக சட்டத்தில் தெளிவு இல்லை எனப் பதில் கொடுத்தார்.



வீர ஜனனம் 20.01 1961
வீர மரணம் 03.03.1988

முன்னாள்
யாழ். மாவட்டத் தளபதி
லெப். கேணல்
இம்ரான்
(சங்கரப்பிள்ளை சதானந்தன்)
(பிரம்படி, கொக்குவில்)

'தியாகத்தின் அடிவேரில்
திரும்பவொரு பூமலரும்
பூமலர்ந்து காயாகும்
புதிய யுகம் கனிந்து வரும்'

- நண்பர்கள் -

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் கமல்
தாயகத்தில்: 11-10-1960
தியாகத்தில்: 02-03-1989

என் மரணத்தால்...
தமிழீழ இலட்சியம் நிறைவேறுமானால்
சாவு எனக்குத் தூசு
என் கனவுகளுடன்
இறப்புக்குப் பின்பும் வாழ்வேன்
- மேஜர் கமல்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இல. கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.